# 7

# நாணயக் கொள்கை, பணம், கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள்

## 7.1 பொதுநோக்கு

**மூன்றாவது ஆண்டாக தொடர்ந்து குறைவாக காணப்பட்ட பணவீக்க சூழலில் மத்திய வங்கியானது தனது நாணயக் கொள்கை நிலையினை 2011 சனவரியில் தளர்த்தியது, அதன் பின்னர், கொடுகடன் மற்றும் நாணயக் கூட்டுக்கள் எறிவு செய்யப்பட்டதிலும் பார்க்க உயர்வாக விரிவடைந்தமையினால் எச்சரிக்கை மற்றும் படிப்படியாக நாணயக் கொள்கையை இறுக்கமாக்கும் நடவடிக்கை என்பன மேற்கொள்ளப்பட்டது.** மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பன மேலும் முறையே 25 அடிப்படைப் புள்ளிகளாலும் 50 அடிப்படைப் புள்ளிகளாலும் 2011 சனவரியில் குறைக்கப்பட்டதன் மூலம் வளர்ச்சிக்கு உகந்த சூழலானது பலப்படுத்தப்பட்டது. எனினும், பெருமளவில் மேலதிக வெளிநாட்டுச் செலாவணியினை உள்ளீர்த்துக் கொள்ளும் மத்திய வங்கியின் நடவடிக்கையின் விளைவினால் ஏற்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தையின் தொடர்ச்சியான உயர் மேலதிகத் திரவத்தன்மையினைக் கருத்தில் கொண்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்பு பொறுப்புக்களுக்கும் பொருத்தமான நியதி ஒதுக்கு விகிதமானது சந்தையிலிருந்து திரவத்தன்மையின் ஒரு பகுதியினை நிரந்தரமாக உள்ளீர்த்துக் கொள்வதற்கும் வங்கியின் கொள்கை வழியினை வெளிப்படுத்துவதற்கும் ஒரு சதவீதப் புள்ளியினால் 2011 ஏப்பிறலில் மேல் நோக்கிச் சரிசெய்யப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதித்தன்மையினைப் பராமரிப்பதற்காக ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் மத்திய வங்கியினால் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணி உட்செலுத்தப்பட்டமையின் விளைவால் மேலதிக திரவத்தன்மையில் மேலும் குறைவு ஏற்பட்டது. இந்த வழிமுறைகள் பெரியளவில் திரவத்தன்மையினை குறைந்ததுடன் இதன் தாக்கம் குறுங்கால வட்டி வீத கட்டமைப்பினை மேல் நோக்கி நகர்த்தியது. கொடுகடன் வளர்ச்சியானது குறைவடைவதற்கான சைகை காணப்படாத நிலையில் மத்திய வங்கியானது தார்மீக இணங்குவிப்பிற்கு சென்றதுடன் மேலதிகத் திரவத்தன்மையின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து வட்டி வீத தளம்பலினை இல்லாமல் செய்வதற்கும் குறுங்கால வட்டி வீதங்களை தேவையான மட்டங்களில் பராமரிப்பதற்காகவும் திறந்த சந்தை நடவடிக்கைகளின் கீழான நாளாந்த ஏலம் மீள ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தகப் பற்றாக்குறையிலும் பேரண்டப் பொருளாதாரத்திலும் கொடுகடனின் உயர் விரிவாக்கத்தின் பாதகமான தாக்கங்களிற்கு முகம் கொடுக்கும் வகையில் 2012 பெப்புருவரியில் மத்திய வங்கியானது அதன் மீள் கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தினை 50 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்திய அதேவேளை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 101 (1) இன்படி கொடுகடன் வளர்ச்சியினை அதிகம் விரும்பத்தக்க மட்டத்திற்கு மட்டுப்படுத்தும்படி 2012 மாச்சில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

**பன்னாட்டு பண்டங்களின் உயர் விலைகள் மற்றும் ஆண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டில் காணப்பட்ட பாதகமான காலநிலை நிலைமைகள் என்பவற்றிற்கு மத்தியிலும் பணவீக்கமானது 2011இல் ஓரிலக்க மட்டங்களில் தொடர்ந்திருந்தது.** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான வழங்கல்கள் உள்ளடங்கலாக அதிகரித்த உள்ளூர் உணவு வழங்கல்கள், நிலையான நாணயமாற்று வீதம், சந்தை பங்குபற்றுநர்களின் சாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் பொருத்தமான நாணயக் கொள்கை வழிமுறைகள், தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக 2011 இலும் பணவீக்கத்தினை ஓரிலக்க மட்டத்தில் பேணுவதற்கு உதவியளித்தது.

**ஒதுக்குப் பணம் மற்றும் விரிந்த பணம் ($M_{2b}$)ஆகிய இரண்டும் 2011இல் இலக்கிடப்பட்டதிலும் பார்க்க உயர் வீதத்தில் விரிவாக்கமடைந்தது.** தனியார் துறை மற்றும் அரச துறைக்கான கொடுகடன் அதிகரிப்பானது எறிவு செய்யப்பட்ட மட்டத்திலும் பார்க்க மேலாக காணப்பட்டமையின் காரணத்தினால் உயர் நாணய விரிவாக்கம் ஏற்பட்டது. முதலீடுகளிற்கான சாதகமான சூழலினைப் பிரதிபலித்து அதிகரித்த பொருளாதார செயற்பாடு, அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி, இறக்குமதிக்கான உயர் கேள்வி, தொடர்ச்சியான குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த கொடுகடனைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் என்பன கொடுகடனிற்கான உயர் கேள்விக்கு பிரதான காரணங்களாக விளங்கின. அதேவேளை வங்கிப் பொறிமுறையிலிருந்தான அரச துறையின் கடன்பாடுகள், அரசாங்கத்தின் பற்றாக்குறை நிதியிடலுக்கு வங்கியல்லாத் துறையின் நிதியிடலில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் அதிகரித்தது. வங்கிப் பொறிமுறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியானது பண வழங்கலில் கொடுகடன் வளர்ச்சியின் விரிவாக்கத் தாக்கத்தினை சிறிதளவில் குறைத்தது.

**உள்நாட்டு பணச் சந்தையின் மேலதிக திரவத்தன்மையின் வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறான இறுக்கமான நாணய நிலைமைகள் வட்டி வீத கட்டமைப்பில் ஓர் மேல் நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தியது.** சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் அண்ணளவாக கொள்கை வட்டி வீத வீச்சின் மத்தியில் காணப்பட்டாலும் இறுதிக் காலாண்டில் பணச் சந்தையின் மேலதிகத் திரவத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஓர் மேல் நோக்கிய நகர்வினை வெளிப்படுத்தியது. வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் ஆகிய இரண்டும் முதல் மூன்று காலாண்டுகளிலும் பெரும்பாலும் நிலையாகக் காணப்பட்டாலும் நான்காம் காலாண்டு காலப்பகுதியில் அதிகரித்தது. முதலாந்தரச் சந்தையில் அரச பிணையங்களின் விளைவுகள் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் அதிகரித்ததுடன் அரச பிணையங்களிற்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி மேல் நோக்கி நகர்ந்த அதேவேளை கடந்த ஆண்டினைவிட கிடையாகவே காணப்பட்டது.

**2012இன் நாணயக் கொள்கையினை வெளிநாட்டின் மற்றும் உள்நாட்டின் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தே நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.** உலகப் பொருளாதாரமானது மீட்சிக்கான தெளிவான சைகையினை இதுவரை வெளிப்படுத்தாத அதேவேளை பன்னாட்டுச் சந்தையில் வலு மற்றும் ஏனைய முக்கிய பண்டங்களின் விலைகள் உயர்வாகவும் தளம்பலுடையதாகவும் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் காணப்படும் கடினமான காலநிலை நிலைமைகள் பிரதான நுகர்வுப் பொருட்களின் வழங்கல்களில் தடைகளை ஏற்படுத்தக்கூடும். 2012இன் ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணய, செலாவணி மற்றும் இறைக் கொள்கை நடவடிக்கைகளால் உயர் வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டுத் துறை சமநிலையில் அதன் தாக்கம் என்பன குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை தேவை ஏற்படின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்காக மேலதிக வழிமுறைகளும் எடுக்கப்படும். இவ்வழிமுறைகள் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் எதிரான தாக்கத்தினை குறுங்காலத்தில் ஏற்படுத்தினாலும் இவை நீண்ட காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் உறுதித்தன்மையினை உறுதி செய்யும்.

## 7.2 நாணயக் கொள்கை

**மத்திய வங்கியினுடைய நாணயக் கொள்கையானது 2011 சனவரியில் மேலும் தளர்த்தப்பட்ட போதிலும் வங்கியானது அதிகப்படியான கொடுகடன் மற்றும் நாணயக் கூட்டுக்களின் விரிவாக்கத்தினால் நாணய நிலைமைகளை படிப்படியாக இறுக்கமாக்கும் நடவடிக்கையினை ஆரம்பித்தது.** மத்திய வங்கியினுடைய நாணயக் கொள்கை கட்டமைப்பானது, பூரணப்படுத்தப்பட்ட பல பொருளாதார ஆய்வுகள் மற்றும் பொதுமக்களின் நிதியியல் நடவடிக்கைகளின் மாற்றங்களூடாக இடம்பெற்று வரும் பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்களையும் உள்வாங்கும் சாத்தியப்பாடுகள் தொடர்பான நாணய ஆய்வுகளையும் அறிமுகப்படுத்தியதனூடாக மேலும் பலப்படுத்தப்பட்டது. மத்திய வங்கியானது தொடர்ந்து விரிந்த பணத்தினை ($M_{2b}$) இடைவீட்டு இலக்காக முன்னிலைப்படுத்தியதுடன் இது தொழிற்பாட்டு இலக்கான ஒதுக்குப் பணத்துடன் பணப்பெருக்கியினூடாக தொடர்புபட்டது. நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் அபிவிருத்திகள் பணவீக்க அழுத்தங்களுக்கு உதவியளிக்காத வகையில், விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்குத் தேவையான பொருத்தமான மட்டங்களை தெரிந்து கொள்ள பொருளாதார அபிவிருத்திகளுடன் எதிரெதிராக மதிப்பிடப்பட்டது. எறிவு செய்யப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நாணய நிகழ்ச்சித்திட்டமானது நாணயச் செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்குத் தொடர்ந்து வழிகாட்டுதலை வழங்கியது. கொள்கை வழிமுறைகளின் ஒரு பகுதியாளராய் பொதுமக்கள் வைத்திருக்கப்பட்டதுடன் அந்த வழிமுறைகள் நாணயக் கொள்கையின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்பாட்டுத்திறன் என்பனவற்றை அதிகரிப்பதற்கு விவேகத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**2011ஆம் ஆண்டிற்கான நாணயச் செயற்றிட்டமானது விரிந்த பணத்தின் வளர்ச்சியானது 14.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்த்ததுடன் இது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் இசைந்து செல்வதாய் இருந்தது.** உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான ஆரம்ப எறிவுகள் அண்ணளவாக 8.5 சதவீத வளர்ச்சியினை குறித்துக்காட்டிய

அதேவேளை ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை உள்ளடக்கிய சுருக்கி அண்ணளவாக 6 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுடன் இது விரிந்த பணத்தின் குறிக்கப்பட்ட வளர்ச்சிக்கான அடிப்படையை வழங்கியது. எனினும், ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியானது, 2009ஆம் ஆண்டு முதல் உணரப்பட்ட உயர் வைப்புக்கான பண விகிதத்தினைப் பிரதிபலித்த குறைவான பணப் பெருக்கியின் காரணமாக அண்ணளவாக 16.4 சதவீதமாக உயர் நிலையிலிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், ஒதுக்குப் பணத்திற்கான ஆண்டுச் சராசரி வளர்ச்சி இலக்கானது, 2011 ஏப்பிறல் 29 அன்று நடைமுறைக்கு வரும் வகையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்களின் நியதி ஒதுக்கு விகிதம் ஒரு சதவீதப் புள்ளியினால் மேல் நோக்கி அதிகரிக்கப்பட்டமையும் பணப்பெருக்கியில் அதன் தாக்கத்தினையும் கருத்தில் கொண்டு 19.5 சதவீதமாக உயர்த்தப்பட்டது. ஆண்டின் இறுதியில் நாணய கூட்டுக்களின் வளர்ச்சியில் ஓர் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உயர் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கும் மேலாக தொடர்ந்தும் காணப்பட்டது.

**ஆண்டின் ஆரம்பப் பகுதியில் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்டு வந்த கொள்கை நிலை படிப்படியாக மாற்றமடைந்ததுடன் வங்கியானது இறுக்கமான நாணயக் கொள்கையின் தேவையை வெளிப்படுத்தியது.** கடந்த ஆண்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கொள்கை தளர்த்தல்களைத் தொடர்ந்து மத்திய வங்கியானது, எதிர்காலப் பணவீக்கம் தொடர்பாகக் காணப்பட்ட ஆரோக்கியமான எதிர்பார்க்கையினால், பொருளாதாரத்தில் தனியார் துறை முதலீட்டினை அதிகரிக்கும் நோக்குடன் கொள்கை வீதங்களை 2011 சனவரியில் மேலும் குறைத்தது. அதன்படி மீள்கொள்வனவு வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளால் 7.00 சதவீதமாகக் குறைக்கப்பட்ட அதேவேளை நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 50 அடிப்படைப் புள்ளிகளால் 8.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. எனினும், சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட உயர்மட்ட மேலதித் திரவத்தன்மையானது குறைந்த செலவிலான கடன் வழங்கலுக்கு உந்து சக்தியாகவிருந்து இறுதியில் பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கான அதன் சாத்தியப்பாடு கருத்தில் கொள்ளப்பட்டது. எனவே, மத்திய வங்கியானது 2011 ஏப்பிறலில் நியதி ஒதுக்கு விகிதத்தினை ஒரு சதவீதப் புள்ளியினால் உயர்த்தியதன் மூலம் ரூ.18 பில்லியன் நிரந்தரமாக சந்தையிலிருந்து மீளப் பெறப்பட்டதுடன் வங்கியினுடைய கொள்கை நிலையானது அதிகம் கட்டுப்பாடுகள் நிறைந்ததனை நோக்கியதாக மாற்றமடைந்துள்ளதனையும் வெளிப்படுத்தியது. அதிகப்படியான கொடுகடன் வளர்ச்சியினால் நிதியியல் முறைமைக்கு ஏற்படக்கூடிய எந்த வகையான பாதிப்புக்களையும் குறைப்பதற்கும் பண வழங்கலின் விரிவாக்கத் தாக்கத்தினை குறைப்பதற்கும் வர்த்தக வங்கிகள் அவற்றின் கடன் வழங்கல் பட்டியலினை அதிகம் தேவையான அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டியதன் தேவைப்பாட்டினை வலியுறுத்தி மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. ஆண்டின் இறுதிப் பகுதியளவில் சந்தைத் திரவத்தன்மை இறக்கமடைந்தமையினைப் பிரதிபலித்து சந்தை வட்டி வீதங்கள் உயர்வடைய ஆரம்பித்த அதேவேளை மத்திய வங்கியானது குறுங்கால வட்டி வீதங்களில் இயைபான சீராக்கத்திற்கு வசதியளிப்பதற்காக மட்டும் திரவத்தன்மையினை வழங்கியது. எனினும், கொடுகடன் வளர்ச்சியானது இறுதிக் காலாண்டு காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு சுருக்கமடையாமை மற்றும் சந்தை வட்டி வீதங்கள் மேல் நோக்கிய அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தமை என்பவற்றைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கியானது 2012 பெப்புருவரியில் அதன் கொள்கை வட்டி வீதங்களை 50 அடிப்படைப் புள்ளிகளால் உயர்த்தியது. அதன்படி மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பன தற்போது 7.50 சதவீதமாகவும் 9.00 சதவீதமாகவும் காணப்படுகின்றது. அத்துடன், நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 101 (1)இன்படி மத்திய வங்கியானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் கொடுகடன் வளர்ச்சியினை 2012 இல் 18 சதவீதத்திற்கு அல்லது ரூ.800 மில்லியனுக்கு எது அதிகமோ அதற்கு மட்டுப்படுத்திய அதேவேளை புதிய வெளிநாட்டு மூலதனத்தைக் கொண்டு வரும் வங்கிகள் அவற்றின் கொடுகடன் வளர்ச்சியினை 23 சதவீதத்திற்கு அல்லது ரூ.1 பில்லியனுக்கு எது அதிகமோ அதற்கு பேணுவதற்கும் அனுமதியளித்து 2012 மாச்சில் வழிகாட்டுதல்களை வழங்கியது.

**அட்டவணை 7.1 அண்மைக்கால நாணயக் கொள்கை வழிமுறைகள் (2007-2012)**

ஓராண்டுக்கு சதவீதம்

| திகதி | மீள் கொள்வனவு வீதம் | நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் | நியதி ஒதுக்கு விகிதம் (அ) | நேர்மாற்று மீள் கொள்வனவு மீதான தண்டவீதம் |
|---|---|---|---|---|
| 23 பெப்புருவரி 2007 | 10.50 | 12.00 | - | - |
| 21 நவெம்பர் 2007 | - | - | - | 19.00 (ஆ) |
| 13 ஒத்தோபர் 2008 | - | - | 9.25 (இ) | - |
| 25 நவெம்பர் 2008 | - | - | 7.75 (ஈ) | - |
| 12 சனவரி 2009 | - | - | - | 17.00 |
| 11 பெப்புருவரி 2009 | 10.25 | 11.75 | - | 16.50 |
| 24 பெப்புருவரி 2009 | - | - | 7.00 (உ) | - |
| 18 மார்ச்சு 2009 | - | - | - | 14.75 |
| 22 ஏப்பிரல் 2009 | 9.00 | - | - | 13.00 |
| 21 மே 2009 | - | 11.50 | - | நீக்கப்பட்டது |
| 16 யூன் 2009 | 8.50 | 11.00 | - | |
| 11 செத்தெம்பர் 2009 | 8.00 (ஊ) | 10.50 (ஊ) | - | |
| 18 நவெம்பர் 2009 | 7.50 | 9.75 | - | |
| 09 யூலை 2010 | 7.25 (ஊ) | 9.50 (ஊ) | - | |
| 20 ஓகத்து 2010 | - | 9.00 | - | |
| 11 சனவரி 2011 | 7.00 | 8.50 | - | |
| 12 ஏப்பிரல் 2011 | - | - | 8.00 (எ) | |
| 03 பெப்புருவரி 2012 | 7.50 | 9.00 | - | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்பு பொறுப்புக்களின் சதவீதமாக பராமரிக்கப்படல் வேண்டும்.
(ஆ) 2007 திசெம்பர் 03இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்
(இ) 2008 ஒத்தோபர் 17இலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்க வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்
(ஈ) 2008 நவெம்பர் 28இலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்கு வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்
(உ) 2009 பெப்புருவரி 27இலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்கு வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்
(ஊ) வியாபாரம் முடிவடைவதிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்.
(எ) 2011 ஏப்பிறல் 29இலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்கு வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்

**வரைபடம் 7.1** உணவு மற்றும் உணவல்லா பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) கொநுவிசு இலிருந்து எடுக்கப்பட்டது (அடிப்படை: 2006/07)




**2011 இறுதியில் பணச் சந்தையில் மேலதிகத் திரவத்தன்மை குறைவான மட்டத்தினை நோக்கி வீழ்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து மத்திய வங்கியானது, சந்தை வட்டி வீதங்களின் அதிகப்படியான ஏற்ற இறக்கங்களை சீராக்குவதற்கு சந்தைத் திரவத்தன்மையை பராமரிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.** உயர் கொடுகடன் விரிவாக்கத்திலான மேலதிகத் திரவத்தன்மையின் வீழ்ச்சிக்கு மேலதிகமாக பெற்றோலிய இறக்குமதி பட்டியல்களின் கொடுப்பனவிற்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு செலாவணியானது ரூபாவின் திரவத்தன்மை, உள்நாட்டு பணச் சந்தையில் மேலும் குறைவடைவதற்குக் காரணமாயிருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் ரூ.110 பில்லியனுக்கு அதிகமாகக் காணப்பட்ட மேலதிகத் திரவத்தன்மையானது 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் உறுதியாக வீழ்ச்சியடைந்து திசெம்பரில் சில சந்தர்ப்பங்களில் சிறியளவிலான எதிர்க்கணியத்திற்கும் திரும்பியது. இதனை எதிர்பார்த்தும் சந்தை வட்டி வீதங்களுக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்கும் முகமாகவும் மத்திய வங்கியானது செத்தெம்பரிலிருந்து திறந்த சந்தை நடவடிக்கையின் கீழ் நாளாந்த ஏலங்களை மீள ஆரம்பித்தது.

**குறிப்பிடக் கூடிய அதிகளவான உள்நாட்டு வழங்கல்பக்க முன்னேற்றங்களால் பெரிதும் உதவப்பட்டு நுகர்வோர் விலைப் பணவீக்கமானது தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் நடு ஓரிலக்கத்தில் காணப்பட்டது.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் கணிப்பிடப்பட்ட பணவீக்கமானது கடந்த ஆண்டின் 6.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இன் இறுதியில் 4.9 சதவீதமாகவிருந்தது. எனினும், 2011இன் நடுப்பகுதி வரை காணப்பட்ட உயர் பணவீக்கத்தினை பிரதிபலித்து ஆண்டுச் சராசரி பணவீக்கமானது 2010 இறுதியின் 6.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் 6.7 சதவீதமாக அதிகரித்தது. ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் பணவீக்கமானது அடிப்படையில் வழங்கல்பக்க இடையூறுகள் காரணமாக ஏற்பட்ட உணவு மற்றும் குடிபானங்களின் உயர் விலைகளினால் உந்தப்பட்டதாகும். எனினும், இந்த நிலைமை உள்நாட்டு வழங்கலின் அதிகப்படியான முன்னேற்றங்கள் காரணமாக இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மாற்றமடைந்ததுடன் இது உணவல்லா நுகர்வுப் பொருட்களிலிருந்து ஏற்பட்ட விலை அழுத்தங்கள் இல்லாமல் செய்தது. அதேவேளை மையப் பணவீக்கமும் ஆண்டு காலப்பகுதியில் ஓரிலக்க மட்டங்களில் தொடர்ந்திருந்ததுடன் 2010 இறுதியில் 8.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இன் இறுதியில் ஆண்டுக்காண்டு மாற்றம் 4.7 சதவீதமாகவிருந்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமானது 2010 இறுதியில் 7.0 சதவீதத்திலிருந்தது 2011 இறுதியில் 6.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**கடந்த ஆண்டுகளைப் போன்று மத்திய வங்கியானது அதன் கொள்கைத் தீர்மானங்களின் வெளிப்படைத்தன்மையினையும் செயற்பாட்டுத் திறனையும் அதிகரிப்பதற்கு பங்குதாரர்களுடனும் பொதுமக்களுடனும் அதன் தொடர்பாடலை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.** எதிர்வரும் ஆண்டிற்கும் மற்றும் நடுத்தர காலத்திற்குமான வங்கியின் கொள்கை நிகழ்ச்சி நிரலான நாணய மற்றும் நிதியியல் துறை கொள்கைகளின் வழிகாட்டி தொடர்ச்சியாக ஐந்தாவது வருடமாக 2011இன் ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. பொருளாதாரத்தின் அபிவிருத்திகள் தொடர்பான பூரணமான ஆய்வுகள், ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் போன்ற ஆண்டு வெளியீடுகளில் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன், தொடர்புச் சாதனங்களுடனான தொடர்ச்சியான தொடர்பாடல் மற்றும் வேறுபட்ட கூட்டங்களில் வங்கி அலுவலர்களின் பிரசன்னம் என்பன தோற்றம் பெற்றுவரும் அபிவிருத்திகள், கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் பொருளாதாரத்தின் புதிய எதிர்பார்க்கைகள், தொடர்பான எண்ணங்களை பகிர்ந்து கொள்வதற்குச் சரியான சந்தர்ப்பங்களாக பயன்படுத்தப்பட்டன. கடந்த பல ஆண்டுகளில் மத்திய வங்கி கைக்கொண்டதனைப் போன்று நாணயக் கொள்கை ஆலோசனைச் சபையின் மாதாந்த கூட்டத்தில் தனியார் துறை பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் தோற்றம் பெற்று வரும் போக்குகள் மற்றும் சாத்தியமான தடுக்கக் கூடிய வழிமுறைகளின் தாக்கங்கள் தொடர்பாக தொடர்ச்சியான ஆலோசனைகள் பெறப்பட்டன.

## 7.3 பணம் மற்றும் கொடுகடனில் அபிவிருத்திகள்

### பணச் சந்தைத் திரவத்தன்மை

**உள்நாட்டுப் பணச் சந்தையின் மேலதிக திரவத் தன்மையானது ஆண்டு முழுவதும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2011 திசெம்பர் இறுதியில் சிறியளவிலான பற்றாக்குறை நிலையை நோக்கி திரும்பியது.** 2010 இறுதியில் காணப்பட்ட மிகையான ரூ.113.5 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து உள்நாட்டுப்

**அட்டவணை 7.2** நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள்

ரூபா. பில்லியன்

| விடயம் | 2010 முடிவில் | 2011 முடிவில் (அ) | மாற்றம் 2010 | | மாற்றம் 2011 | |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகை | % | தொகை | % |
| 1. வெளிநிற்கும் நாணயம் | 255.7 | 293.2 | 38.2 | 17.6 | 37.6 | 14.7 |
| 1.1 பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 216.5 | 242.9 | 34.7 | 19.1 | 26.3 | 12.2 |
| 1.2 வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம் | 39.1 | 50.4 | 3.5 | 9.9 | 11.3 | 28.8 |
| 2. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் | 104.9 | 146.3 | 18.8 | 21.8 | 41.4 | 39.5 |
| 3. மத்திய வங்கியிலுள்ள அரச முகவர்களின் வைப்புக்கள் (ஆ) | ... | ... | ... | | ... | |
| **4. ஒதுக்குப்பணம் (1+2+3)** | **360.5** | **439.5** | **57.0** | **18.8** | **79.0** | **21.9** |
| 5. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 190.6 | 195.8 | 35.8 | 23.1 | 5.2 | 2.7 |
| **6. குறுகிய பணநிரம்பல், $M_1$ (1.1+5)** | **407.2** | **438.7** | **70.5** | **20.9** | **31.5** | **7.7** |
| 7. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | 1,405.8 | 1,753.9 | 205.8 | 17.1 | 348.1 | 24.8 |
| **8. விரிந்த பணநிரம்பல், $M_2$ (6+7)** | **1,813.0** | **2,192.6** | **276.2** | **18.0** | **379.6** | **20.9** |
| 9. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் (இ) | 278.4 | 299.1 | 9.0 | 3.3 | 20.7 | 7.4 |
| **10. ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல், ($M_{2b}$) (8+9)** | **2,091.4** | **2,491.7** | **285.2** | **15.8** | **400.3** | **19.1** |
| **பணப்பெருக்கி $M_{2b}$** | **5.80** | **5.67** | | | | |
| **சுற்றோட்ட வேகம் $M_{2b}$ (ஈ)** | **2.92** | **2.85** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மத்திய வங்கியுடனான அரச முகவர்களின் வைப்பு 2010 இறுதியில் ரூ. 5.71 மில்லியன் மற்றும் 2011 இறுதியில் ரூ. 1.75 மில்லியனாக இருந்தது
(இ) கரை கடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வதிவோர் வகையிலான வைப்புக்களையும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுடனான வெளிநாட்டு நாணய வைப்புக்களின் ஒரு பகுதியினையும் உள்ளடக்குகின்றது
(ஈ) ஆண்டு காலப்பகுதியில்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பணச் சந்தையானது 2011 திசெம்பர் இறுதியில் ரூ.5.4 பில்லியன் கொண்டதோர் பற்றாக்குறையை பதிவு செய்தது. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் பெறுமதியான நாட்டுக்கான முறியின் பெறுகைகளின் பயன்பாட்டின் மூலம் 2011 யூலையில் கணிசமானளவு திரவத்தன்மை சந்தைக்குள் உட்செலுத்தப்பட்டது. எனினும், உள்நாட்டுக் கொடுகடனின் தொடர்ச்சியான உயர் விரிவாக்கம், 2011 ஏப்பிறலில் நியதி ஒதுக்கு வீதமானது 1 சத விகிதப் புள்ளியினால் 8 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை (இது ஏறக்குறைய ரூ.18 பில்லியனை உள்ளீர்த்தது) மற்றும் மத்திய வங்கியினால் உள்நாட்டுச் சந்தைக்கு பன்னாட்டுச் செலாவணி வழங்கப்பட்டமை போன்றவற்றின் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்தது. எனினும் முதலாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளை குறிப்பாக இறுதிக் காலாண்டில் மத்திய வங்கி கொள்வனவு

**வரைபடம் 7.2** உள்நாட்டு பணச் சந்தையில் ஓரிரவு திரவத்தன்மை நிலை




செய்தததனூடாக வீழ்ச்சியானது மெதுவடைந்ததுடன் பணச்சந்தை வட்டி வீதங்களின் உறுதித்தன்மையினைக் கருத்திற் கொண்டு வங்கியானது 2011 செத்தெம்பர் 19 அன்று திறந்த சந்தை நடவடிக்கைக்குக் கீழான ஓரிரவு ஏலங்களை மீள ஆரம்பித்தது. நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் ஒத்தோபரின் ஆரம்பத்தில் சில சந்தர்ப்பங்களில் தேவையானதாகவிருந்ததுடன் சந்தைத் திரவத்தன்மை மேலதிகமாக இருந்த சில நாட்களிலும் கூட சந்தை வட்டி வீதங்களின் மேல் நோக்கிய அழுத்தங்களை குறைக்கும் முகமாக பற்றாக்குறையை எதிர்நோக்கும் வங்கிகளுக்கு திரவத்தன்மையினை வழங்குவதற்கு திசெம்பரில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் பல தடவைகள் தேவையாகவிருந்தது. சில நாட்களில் காணப்பட்ட மேலதிகத் திரவத்தன்மை என்பது சில வங்கிகளுக்கிடையில் காணப்பட்டாலும் அவர்களின் சொந்தக் கடன் வழங்கல் எல்லைகளின் அடிப்படையில் வங்கிகளுக்கிடையிலான சந்தைக்குக் கடன் வழங்காது மத்திய வங்கியின் துணைநில் வசதி நிலையில் மீள்கொள்வனவு வீதத்துடன் தொடர்ந்து வைத்திருக்கப்பட்டது[1].

## ஒதுக்குப்பணம்

ஒதுக்குப் பணமானது 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட வீதத்திலும் மேலாக தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்ததுடன் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் சில வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டது. ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியானது ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் 18

[1] ஓரிரவு பணச் சந்தையில் இதன் பாதகமான தாக்கத்தினை எதிர்கொள்வதற்காக மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தினை வழங்குகின்ற நாட்களில் மீள்கொள்வனவு துணைநில் வசதியின் நாளாந்த பாவனையை 2012 மாச்சு 15 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஓர் பங்குபற்றும் நிறுவனத்திற்கு ரூ.100 மில்லியனாக மட்டுப்படுத்தியது.

**வரைபடம் 7.3 நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி**




சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்ட அதேவேளை அதன் பின்னர் ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியானது ஆண்டுக்காண்டு அடிப்படையில் 20 சதவீதத்திற்கும் மேலாகக் காணப்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள காசு மற்றும் மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே ஒதுக்குப் பணத்தின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்குக் காரணமாயிருந்தது. 2011 ஏப்பிறலில் அதிகரிக்கப்பட்ட நியதி ஒதுக்கு வீதம் மற்றும் உயர் கொடுகடன் விரிவாக்கத்தில் பிரதிபலிக்கும் பொதுமக்களின் அதிகரித்த வைப்புக்கள் என்பன மத்திய வங்கியில் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தன. 2011இல் நாளாந்த சராசரி ஒதுக்குப் பணம் 2010இன் ரூ.335.2 பில்லியனிலிருந்து ரூ.409.2 பில்லியனாய் ஆண்டின் திருத்தப்பட்ட சராசரி இலக்கான 19.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 22.1 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது.

சொத்துப் பக்கத்தில் நோக்குகையில் ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியானது மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமும் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியினாலும் உந்தப்பட்டதாகும். மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் வழங்கலில் ரூ.185.8 பில்லியன் கொண்ட அதிகரிப்பு மற்றும் பிரதானமாக மத்திய வங்கியினுடைய ஒட்டுமொத்த பிணையங்களின் இருப்பையும் இளைப்பாற்றியமையின் காரணமாக ரூ.58.8 பில்லியனால் வீழ்ச்சியடைந்த மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் என்பவற்றின் பிரதான காரணமாக தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் அண்ணளவாக ரூ.244.4 பில்லியனாக விரிவடைந்தது. அரசிற்கான தேறிய கொடுகடன் வழங்கலின் அதிகரிப்பிற்கு மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி முறிகளின் ரூ.167.7 பில்லியனினாலான கணிசமான அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களான ரூ.16.9 பில்லியன் என்பன காரணமாகவிருந்தன. உள்நாட்டுச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் என்பவற்றிற்கான அதிகரித்த பொறுப்புக்கள் என்பவற்றின் பிரதான காரணத்தினால் மத்திய வங்கியினுடைய தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.165.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது.

## குறுகிய பணம் ($M_1$)

2011ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் நிலையாகக் காணப்பட்ட குறுகிய பணத்தின் வளர்ச்சியானது பின்னரைப் பகுதியில் மெதுவடைந்தது. பொதுமக்களிடமுள்ள காசு மற்றும்

**அட்டவணை 7.3 ஒதுக்குப்பணத்தினதும் விரிந்த பணத்தினதும் ($M_{2b}$) மூலங்கள் (நாணய அளவீட்டின்படி கணிப்பிடப்பட்டது)**

ரூபா. பில்லியன்

| | 2010 முடிவில் (அ) | 2011 முடிவில் (ஆ) | மாற்றம் 2010 தொகை | மாற்றம் 2010 % | மாற்றம் 2011 தொகை | மாற்றம் 2011 % |
|---|---|---|---|---|---|---|
| **ஒதுக்குப்பணம்** | **360.5** | **439.5** | **57.0** | **18.8** | **79.0** | **21.9** |
| மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 505.5 | 340.1 | 93.3 | 22.6 | -165.4 | -32.7 |
| மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | -145.0 | 99.4 | -36.3 | -33.4 | 244.4 | 168.6 |
| **விரிந்த பணம் $M_{2b}$** | **2091.4** | **2,491.7** | **285.2** | **15.8** | **400.3** | **19.1** |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 377.4 | 98.1 | -24.4 | -6.1 | -279.4 | -74.0 |
| நாணய அதிகாரசபைகள் | 505.5 | 340.1 | 93.3 | 22.6 | -165.4 | -32.7 |
| வர்த்தக வங்கிகள் | -128.0 | -242.0 | -117.7 | -1,140.2 | -114.0 | -89.1 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 1,714.0 | 2,393.7 | 309.7 | 22.1 | 679.7 | 39.7 |
| உள்நாட்டுகொடுகடன் | 2,262.9 | 3,038.0 | 355.1 | 18.6 | 775.1 | 34.3 |
| அரசுக்காக தேறிய கொடுகடன் | 627.2 | 833.6 | -13.1 | -2.1 | 206.4 | 32.9 |
| மத்திய வங்கி | 76.9 | 262.7 | -32.1 | -29.5 | 185.8 | 241.7 |
| வர்த்தக வங்கிகள் | 550.3 | 570.9 | 19.0 | 3.6 | 20.6 | 3.7 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 144.6 | 198.5 | 71.3 | 97.4 | 53.9 | 37.3 |
| தனியார்துறைக்கான கொடுகடன் | 1,491.1 | 2,005.9 | 296.9 | 24.9 | 514.8 | 34.5 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -548.9 | -644.3 | -45.4 | -9.0 | -95.4 | -17.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கேள்வி வைப்புக்களை உள்ளடக்கிய குறுகிய பணமானது 2010 இறுதியின் வளர்ச்சியான 20.9 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2011 திசெம்பரில் 7.7 சதவீதம் கொண்ட ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஆண்டுக்காண்டு அடிப்படையில் பொதுமக்களிடமுள்ள காசு வளர்ச்சியானது 2010இன் இறுதியின் 19.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2011 இறுதியில் 12.2 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. அதேபோல், பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் 2010இன் 23.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2.7 சதவீதத்திற்கு மெதுவடைந்ததுடன் இந்த மெதுவடைவு குறிப்பாக ஆண்டின் இறுதிப்பகுதியில் அதிகரித்த சந்தை வட்டி வீதங்கள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடும்.

## விரிந்த பணம் ($M_{2b}$)

**விரிந்த பணமானது 2011இல் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அதிக வீதத்தில் விரிவடைந்ததுடன் 2010இன் இறுதியின் 15.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2011 திசெம்பரில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 19.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இதன்படி ஆண்டு காலப்பகுதியில் விரிந்த பணத்தின் சராசரி வளர்ச்சியானது ஆண்டிற்கான நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் இலக்கிடப்பட்ட 14.5 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2011இல் 19.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**பொறுப்பு பக்கத்தினை நோக்குகையில் விரிந்த பணத்தின் வளர்ச்சியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்த கால மற்றும் சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்கிய போலி நாணயத்தின் வளர்ச்சியில் பிரதிபலித்தது.** போலி நாணயமானது ஆண்டுக்காண்டு அடிப்படையில் 2010இன் 14.6 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2011இல் 21.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. போலி நாணயத்தின் அதிகரிப்பானது ஆண்டு காலப்பகுதியின் விரிந்த பணத்தின் அதிகரிப்பில் 92 சதவீதத்திற்கு வகைகூறி ஆண்டின் பிற்பகுதியில் பணச் சந்தையில் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து வங்கிகள் பணத்தினை சேகரித்துக் கொள்வதற்காக வைப்புக்களுக்கு உயர் வட்டி வீதங்களை வழங்கியதைத் தொடர்ந்தான வட்டி உழைக்கும் கால வைப்புக்களினை நோக்கிய நகர்வினைப் பிரதிபலித்தது. வர்த்தக வங்கிகளின் போலி நாணயத்தின் அதிகரிப்பிற்கு பங்குச் சந்தையினுடைய மெதுவான செயலாற்றமும் மற்றுமொரு காரணமாயிருந்திருக்கக்கூடும்.

வரைபடம் 7.4 வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் அளவு மற்றும் வளர்ச்சி




அட்டவணை 7.4 வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பண உதவிகளின் வகைப்படுத்தல் (அ)(ஆ)

ரூபா. பில்லியன்

| துறை | 2010 முடிவில் (இ) | 2011 முடிவில் (ஈ) | % பங்கு 2011 | % மாற்றம் 2011 |
|---|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **216.8** | **264.3** | **13.0** | **21.9** |
| இதில் தேயிலை | 45.5 | 38.5 | 1.9 | -15.3 |
| இறப்பர் | 14.4 | 17.0 | 0.8 | 18.2 |
| தெங்கு | 4.7 | 4.6 | 0.2 | -2.1 |
| நெல் | 13.8 | 11.6 | 0.6 | -16.6 |
| மரக்கறி, பழம் மற்றும் சிறிய உணவுப் பயிர்கள் | 6.9 | 8.9 | 0.4 | 30.1 |
| மீன்பிடி | 4.1 | 5.9 | 0.3 | 43.0 |
| **கைத்தொழில்** | **547.3** | **687.7** | **33.9** | **25.7** |
| இதில் கட்டடவாக்கம் | 234.2 | 271.3 | 13.4 | 15.8 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 31.4 | 42.2 | 2.1 | 34.4 |
| துணிகள் மற்றும் ஆடைகள் | 85.3 | 98.7 | 4.9 | 15.6 |
| உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்து கருவிகள் | 41.8 | 62.6 | 3.1 | 50.0 |
| **பணிகள்** | **317.6** | **468.0** | **23.1** | **47.4** |
| இதில் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 108.4 | 160.2 | 7.9 | 47.8 |
| சுற்றுலா | 32.4 | 46.6 | 2.3 | 44.0 |
| நிதி மற்றும் வியாபாரப் பணிகள் | 65.8 | 117.2 | 5.8 | 78.1 |
| கப்பலேற்றல், வான்போக்குவரத்து மற்றும் வழங்கல் மற்றும் சரக்குப் பரிமாற்றம் | 8.9 | 11.4 | 0.6 | 28.4 |
| **தனியார் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (உ)** | **404.6** | **576.6** | **28.4** | **42.5** |
| இதில் நீண்ட கால நுகர்வு பொருட்கள் | 35.2 | 67.4 | 3.3 | 91.5 |
| அடகுபிடித்தல் | 166.3 | 281.9 | 13.9 | 69.5 |
| **பாதுகாப்பு வலைத்திட்டத்துடன் தொடர்பாடல் (உ+ம், சமுர்த்தி)** | **23.4** | **33.8** | **1.7** | **44.4** |
| **மொத்தம்** | **1,509.7** | **2,030.4** | **100.0** | **34.5** |

(அ) கரை கடந்த வங்கிப் பிரிவுகளின் கடண்கள் மற்றும் முற்பணங்கள் உள்ளடங்களாக
(ஆ) கடண்கள் மற்றும் முற்பணங்களில் மேலதிக பற்றுக்கள், கழிவு செய்யப்பட்ட ஊண்டியல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சேகரிப்பு நிலையில் உள்ள காசு விடயங்களை நீககப்பட்டுள்ளது.
(இ) திருத்தப்பட்டது
(ஈ) தற்காலிகமானது
(உ) ‘கட்டடவாக்கம்’ என்பதன் கீழ் வகைப்படுத்தப்பட்ட தனியாள் வீடமைப்பு கடன்கள் நீங்கலாக

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**சொத்துப் பக்கத்தில் இந்த விரைவான வளர்ச்சிக்கு தனியார் துறை மற்றும் அரச துறை ஆகிய இரண்டிற்கும் வழங்கப்பட்ட கொடுகடன் அதிகரிப்பே முற்று முழுதாக பங்களிப்பு செய்துள்ளது.** உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தில் வங்கித்தொழில் முறைமையில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ஆண்டு காலப்பகுதியில் 39.7 சதவீதமாக அதிகரித்தது. இதன் விளைவால் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் நாணய விரிவாக்கத்திற்கான பங்களிப்பு கடந்த ஆண்டின் அண்ணளவான பங்களிப்பான 109 சதவீதத்திலிருந்து 2011இல் அண்ணளவாக 170 சதவீதத்திற்கு அதிகரித்தது. வங்கித்தொழில் முறைமையில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் சுருக்கும்

விரிந்த பணத்தின் விரிவாக்கத்தினை ஓரளவிற்குக் குறைத்தது. 2011 காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2010 இறுதியின் ரூ. 377.4 பில்லியனிலிருந்து ரூ. 98.1 பில்லியனுக்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் ஆகிய இரண்டிலும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட சுருக்கம் இந்த வீழ்ச்சிக்கு வகைகூறியது. அதேவேளை மத்திய வங்கியினால் உள்நாட்டுச் சந்தைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியானது நாணய மாற்று வீதத்தில் காணப்பட்ட அழுத்தத்தினை குறைத்ததுடன் மத்திய வங்கியினுடைய தேறிய வெளிநாட்டுச் சொத்தக்களையும் குறைத்தது. வர்த்தக வங்கிகளினுடைய தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சிக்கு, ஓர் உள்நாட்டுச் சொத்தான இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீதான முதலீடுகளை நோக்கிய அதிகரித்த நகர்வு மற்றும் செலுத்த வேண்டிய எண்ணெய் இறக்குமதி பட்டியல்களை செலுத்தித் தீர்ப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உதவியளித்தமை என்பன பிரதான காரணமாகவிருந்தன. அத்துடன் அதிகரித்த இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்காக வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சலும் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

**உள்நாட்டுக் கொடுகடனில் தனியார் துறையினால் பெறப்பட்ட கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி 2010 இறுதியில் 24.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் 34.5 சதவீதத்தில் குறைவின்றி தொடர்ந்தது.** முதலீட்டுக்கான சாத்தியமான சூழலினைப் பிரதிபலித்து வடக்கு மற்றும் கிழக்கு உள்ளடங்கலாக அதிகரித்த பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி என்பவற்றினால் கொடுகடனிற்கான கேள்வி உயர்வாக இருந்தது. மேலும்,

**வரைபடம் 7.5** வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல்




தொடர்ச்சியான குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் நாடு பூராகவும் விரிவாக்கமடைந்த வங்கித்தொழில் வசதிகளினால் முன்னேற்றமடைந்த கொடுகடனைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் என்பவற்றினால் கடன்படுநர்களும் நன்மையடைந்தார்கள். தனியார் துறைக்கான கொடுகடன் 2010இன் ரூ.297 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு காலப்பகுதியில் அண்ணளவாக ரூ.515 பில்லியனால் அதிகரித்தது.

**காலாண்டு அளவீட்டின் வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கடன்களும் முற்பணங்களில் அனைத்துப் பிரதான வகைகளுக்குமான கொடுகடன் அதிகரித்தது.** வேளாண்மை மற்றும் மீன்பிடி துறைக்கான கொடுகடன் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 21.9 சதவீதமாக வளர்ச்சியடைந்த அதேவேளை கைத்தொழில் மற்றும் பணிகள் துறைக்கான கொடுகடன் முறையே 25.7 சதவீதம் மற்றும் 47.4 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏற்கனவே உயர்வான கடந்த ஆண்டின் 49.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து ஆண்டுக்காண்டு அடிப்படையில் 2011 திசெம்பரில்

**அட்டவணை 7.5** வர்த்தக வங்கிகளால் தனியால் துறைக்கான வெளிநின்ற கொடுகடனின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| விடயம் | | திசெம்பர் 2010 | | திசெம்பர் 2011 | |
|---|---|---|---|---|---|
| | | % பங்கு | % வளர்ச்சி | % பங்கு | % வளர்ச்சி |
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | குறுங்காலம் | 10.3 | 31.7 | 10.3 | 33.6 |
| | நடுத்தரகாலம் | 2.7 | 92.2 | 1.8 | -7.8 |
| | நீண்டகாலம் | 1.3 | 39.6 | 0.9 | -8.8 |
| கைத்தொழில் | குறுங்காலம் | 14.6 | 21.3 | 13.3 | 22.7 |
| | நடுத்தரகாலம் | 7.9 | 5.8 | 8.0 | 35.8 |
| | நீண்டகாலம் | 13.7 | 4.4 | 12.5 | 22.9 |
| பணிகள் | குறுங்காலம் | 10.5 | 41.8 | 10.7 | 36.3 |
| | நடுத்தரகாலம் | 6.0 | 34.1 | 7.4 | 65.1 |
| | நீண்டகாலம் | 4.5 | 9.2 | 5.0 | 49.4 |
| தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் | குறுங்காலம் | 18.1 | 49.7 | 19.8 | 46.6 |
| | நடுத்தரகாலம் | 5.4 | 35.9 | 4.9 | 20.8 |
| | நீண்டகாலம் | 3.3 | -17.4 | 3.8 | 55.8 |
| பாதுகாப்பு வலைத் திட்டங்கள் தொடர்பான | குறுங்காலம் | 0.8 | 29.6 | 0.3 | -52.4 |
| (உ+ம்: சமுர்த்தி) | நடுத்தரகாலம் | 0.4 | 25.9 | 0.4 | 16.2 |
| | நீண்டகாலம் | 0.4 | 204.9 | 1.0 | 293.2 |

குறிப்பு: கொடுகடனின் வகைப்படுத்தலானது ஆரம்ப முதிர்ச்சியினை அடிப்படையாக கொண்டதுடன் அது பினவருமாறு: ஒரு வருடம் வரை - குறுங்காலம் வரை, ஒரு வருடத்திக்கும் ஐந்த வருடத்திற்கும் இடையில் - நடுத்தர காலம், ஐந்த வருடத்திற்கு மேல் - நீண்டகாலம்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 7.6 நாணய அளவீட்டின் ($M_4$) மூலங்கள் (நிதியியல் அளவீட்டின்படி கணிப்பிடப்பட்டது)**

ரூபா. பில்லியன்

| விடயம் | 2010 முடிவில் (அ)) | 2011 முடிவில் (ஆ) | மாற்றம் 2010 தொகை | மாற்றம் 2010 மூ | மாற்றம் 2011 தொகை | மாற்றம் 2011 மூ |
|---|---|---|---|---|---|---|
| நாணய அளவீடு ($M_4$) | 2,636.0 | 3,135.8 | 356.1 | 15.6 | 499.8 | 19.0 |
| உள்ளார்ந்த காரணிகள் | | | | | | |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 354.5 | 92.4 | -23.6 | -6.2 | -262.1 | -73.9 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 2,281.5 | 3,043.4 | 379.7 | 20.0 | 761.9 | 33.4 |
| உள்நாட்டுக் கொடுகடன் | 2,973.9 | 3,940.7 | 460.0 | 18.3 | 966.8 | 32.5 |
| அரசுக்கான தேறிய கொடுகடன் | 932.4 | 1,154.6 | 20.9 | 2.3 | 222.2 | 23.8 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 144.6 | 198.5 | 71.3 | 97.4 | 53.9 | 37.3 |
| தனியார்துறைக்கான கொடுகடன் | 1,896.9 | 2,587.6 | 367.8 | 24.1 | 690.6 | 36.4 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -692.4 | -897.3 | -80.3 | -13.1 | -204.9 | 29.6 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

69.5 சதவீத வளர்ச்சியை பதிவு செய்த அடகுபிடித்தலுக்கெதிரான முற்பணங்களின் வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் கொடுகடனில், தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2011இல் ஆண்டுக்காண்டு அடிப்படையில் கடந்த ஆண்டின் 33.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 42.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. அடகுபிடித்தலுக்கெதிரான முற்பணங்களின் வளர்ச்சியின் அபரிமிதமான அதிகரிப்பு ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட தங்கத்தின் உயர் விலைகளிலும் அடகுபிடிக்கும் தொழிலில் ஈடுபடும் நிறுவனங்களுக்கிடையில் காணப்பட்ட அதிகரித்த போட்டியிலும் பிரதிபலித்தது. ஆண்டின் இறுதியில், அடகுபிடித்தலினாலான கொடுகடனின் மொத்த வெளிநின்றளவின் சதவீதப் பங்கானது நிலையான நுகர்வுப் பொருட்கள் மற்றும் நிதி மற்றும் வியாபாரப் பணிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனிற்கு அடுத்தபடியாகக் காணப்பட்ட அதேவேளை வேளாண்மை மற்றும் மீன்பிடி, கட்டடவாக்கம் மற்றும் புடவைகள் மற்றும் ஆடைகள் துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் பங்கில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது.

காலாண்டு அளவீட்டில் அறிக்கையிடப்பட்டதற்கமைய கடன்கள் மற்றும் முற்பணங்களின் ஆரம்ப முதிர்வுக் காலத்தின்படி வேளாண்மை மற்றும் மீன்பிடி துறை நீங்கலாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கொடுகடனில் ஓர் அதிக வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலான உயர் மூலதன முதலீடுகள் மற்றும் வீட்டுடைமையாளர்களினால் அதிகரித்த வீட்டு வசதி கட்டுமானப் பணிகள் மற்றும் உந்து ஊர்திகள் உள்ளடங்கலாக நிலையான நுகர்வுப் பொருட்களின் கொள்வனவுகள் என்பன நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடனின் அதிகரித்த விரிவாக்கத்திற்குக் காரணங்களாயிருந்திருக்கக்கூடும். எனினும், குறுங்காலக் கொடுகடன்களே அனைத்துத் துறைகளினதும் வெளிநின்ற கொடுகடனில் அதிக பங்கிற்கு இப்பொழுதும் வகைகூறுகின்றது.

ஆண்டு காலப்பகுதியில் அரசிற்கான தேறிய கொடுகடனானது ரூ.206 பில்லியனால் அதிகரித்ததுடன் அரச வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டளவினை ரூ.42 பில்லியனால் விஞ்சியது. ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் அரச பிணையங்களின் பெறுமதி அண்ணளவாக ரூ.167.7 பில்லியனாகக் கணிசமானளவு அதிகரித்த அதேவேளை 2011இல் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் ரூ.16.9 பில்லியனால் அதிகரித்தது. இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் ஏனைய அரச பிணையங்கள் மீதான உயர் முதலீடுகளுடன் வர்த்தக வங்கிகளின் தேறிய அரசிற்கான கொடுகடனும் அதிகரித்தது.

2011 ஆண்டு காலப்பகுதியில் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2010 இறுதியில் ரூ.145 பில்லியனிலிருந்து அண்ணளவாக ரூ.54 பில்லியனால் அதிகரித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் எண்ணெய் இறக்குமதிப் பட்டியல்களை செலுத்தித் தீர்ப்பதற்கான அதிகளவிலான வழங்கல்களுடன் வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கிச் சேவைகள் பிரிவுகள் இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக வகைகூறியது.

## விரிந்த பணம் ($M_4$)[2]

நிதியியல் அளவீட்டினால் ($M_4$) கணிப்பிடப்பட்ட விரிந்த பணத்தின் வளர்ச்சியானது ஆண்டு காலப்பகுதியில் நாணய அளவீட்டினால் ($M_{2b}$) மதிப்பிடப்பட்ட விரிந்த பண வழங்கலின் போக்குடன் இணைந்து செல்வது அவதானிக்கப்பட்டது. விரிந்த பணம் $M_4$இன் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது 2010 இறுதியில் காணப்பட்ட 15.6 சதவீத வளர்ச்சிலிருந்து 2011 இறுதியில் 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந்த வளர்ச்சியானது இக்காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டுச்

[2] நிதியியல் அளவீடானது மத்திய வங்கி மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் என்பவற்றிற்கு மேலதிகமாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் உள்ளடக்கி ஓர் விரிவான திரவத்தன்மை கணிப்பீடினை வழங்குகின்றது. எனினும், நாணயக் கொள்கைத் தேவைப்பாட்டிற்காக மத்திய வங்கியினால் $M_{2b}$ பயன்படுத்தப்படுகின்றது.

சொத்துக்களின் வீழ்ச்சியினைத் தொடர்ந்தான தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பினால் முழுவதும் உந்தப்பட்டதாகும். 2011 காலப்பகுதியில் முழுமையான நியதிகளில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ.761.9 பில்லியனால் அதிகரித்த அதேவேளை தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.262.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கியினதும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட சுருக்கமானது தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் ($M_4$ இல்) வீழ்ச்சிக்கு காரணமாயிருந்த அதேவேளை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஆண்டு காலப்பகுதியில் ரூ.17.3 பில்லியனால் அதிகரித்தது. தேறிய உள்நாட்டுச் சொத்துக்களை கருத்தில் கொள்கையில் தனியார் மற்றும் அரச துறைக்கான கொடுகடன் 2011இல் அபரிதமாக அதிகரித்தது. தனியார் துறைக்கான கொடுகடன் ஆண்டுக்காண்டு அடிப்படையில் கடந்த ஆண்டில் பதிவான 24.1 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2011இல் 36.4 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. தேறிய அரசிற்கான கொடுகடனானது 2010இல் ரூ.20.9 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து ரூ.222.2 பில்லியனால் 2011 இல் அதிகரித்தது.

**நிதியியல் அளவீட்டின்படி சேமிப்புக்கள் மற்றும் கால வைப்புக்களை உள்ளடக்கிய போலி நாணயத்தின் வளர்ச்சியானது 2010 இறுதியின் (ஆண்டுக்காண்டு) 15 சதவீதத்திலிருந்து 2011 இறுதியில் 20.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் போலி நாணயத்தின் ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2010 திசெம்பர் இறுதியின் 22 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2011 இறுதியில் 27.3 சதவீதமாகவிருந்தது. கால மற்றும் சேமிப்பு வைப்புக்களுக்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் ஒப்பீட்டு ரீதியில் உயர் வட்டி வீதங்கள் வழங்கப்பட்டமை, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் முன்னேற்றம் கண்ட நிதியியல் நிலைமைகள் மற்றும் அதிகமான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியல்படுத்தப்பட்டமை என்பன உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளில் வைப்புக்களின் அதிகரிப்புக்கு காரணமாயிருந்தது. அதேவேளை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியினுடைய போலி நாணயத்தின் வளர்ச்சி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 2010இன் 13.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் 17.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

**தனியார் துறைக்கான கொடுகடனானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கொடுகடன் வழங்கலின் உயர் வளர்ச்சியினால் ஆண்டுக்காண்டு அடிப்படையில் நாணய அளவீட்டின் ($M_{2b}$) 34.5 சதவீதத்தினாலான வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து நிதியியல் அளவீட்டின்படி ($M_4$) 36.4 சதவீதத்தால் அதிகரித்தது.** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது குறிப்பாக அதிகரித்த குத்தகை நிதியிடல் மற்றும் அடகுபிடித்தல் என்பவற்றினால் 2010இன் 38.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 67.5 சதவீதத்தினால் ரூ.110.9 பில்லியனுக்குக் கணிசமானளவில் விரிவாக்கமடைந்தது[3]. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் 2011 இறுதியில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2010 இறுதியில் பதிவான 11.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 26.9 சதவீதத்தால் அதிகரித்தது.

**அதேவேளை, தேறிய அரசிற்கான கொடுகடனின் வளர்ச்சியானது மத்திய வங்கிகளின் தேறிய அரசிற்கான கொடுகடனின் அதிகரிப்பினால் பிரதானமாக ஏற்பட்டதுடன் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளிலிருந்தான தேறிய அரசிற்கான கொடுகடனும் 2011 காலப்பகுதியில் அதிகரித்தது.** எனினும், நிதியியல் அளவீட்டின்படி 2011 காலப்பகுதியில் அரசிற்கான தேறிய கொடுகடன் நாணய அளவீட்டின்படியான ரூ.206.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட ரூ.222.2 பில்லியனாக உயர்வாகக் காணப்பட்டது.

## 7.4 வட்டி வீதங்கள்

**மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதமானது 2011 சனவரியில் கீழ் நோக்கி சீர்செய்யப்பட்டதன் பின்னர் ஆண்டு காலப்பகுதியில் மாற்றமின்றியிருந்தது.** முதலீட்டுக்கு மேலும் ஊக்கமளிக்கும் முகமாகவும் தொடர்ச்சியான பொருளாதார விரிவாக்கத்திற்கு உதவுவதற்கும் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 2011 சனவரியில் முறையே 25 அடிப்படைப் புள்ளிகளாலும் 50 அடிப்படைப் புள்ளிகளாலும் குறைக்கப்பட்டதுடன் அதன் பின்னர் அவை முறையே 7.00 சதவீதமாகவும் 8.50 சதவீதமாகவும் இருந்தன. அதேவேளை வங்கி வீதமானது 2011இல் தொடர்ந்து 15.00 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. அரச பிணையங்களின் விளைவுகள் உள்ளடங்கலாக சந்தை வட்டி வீதங்கள் 2011இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் பெருமளவிற்கு நிலையாகவே இருந்தது. இருப்பினும் 2011இன் நான்காம் காலாண்டு காலப்பகுதியில் உள்நாட்டுச் சந்தையில் மேலதித் திரவத்தன்மையின் வீழ்ச்சியுடன் சந்தை வட்டி வீதங்களிலும் அரச பிணையங்களின் விளைவுகளிலும் ஓர் மேல் நோக்கிய நகர்வு அவதானிக்கப்பட்டது. அதேவேளை 2012 பெப்புருவரியில் மத்திய வங்கியானது அதன் கொள்கை வீதங்களை தலா 50 அடிப்படைப் புள்ளிகளால் உயர்த்தியதுடன் அதன்படி மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பன முறையே 7.50 சதவீதமாகவும் 9.00 சதவீதமாகவும் அதிகரித்தன.

3 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஓர் கூர்மையான அதிகரிப்பு 2011 திசெம்பரில் அவதானிக்கப்பட்டதுடன் இதற்கு ஏற்கனவே நிறுவப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் 2011 திசெம்பரில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஓர் அனுமதிப் பத்திரத்திரத்தினை பெற்றுக் கொண்டமையே பிரதான காரணமாகும்.

## பணச் சந்தை வீதங்கள்

2011 ஆண்டு இவ்வாண்டு காலப்பகுதியில் **வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது சந்தையின் திரவத்தன்மையின் மாற்றங்களைப் பிரதிபலித்து நகர்ந்தது.** சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் அண்ணளவாக கொள்கை வட்டி வீத வீச்சின் நடுவில் 7.75 சதவீதத்தில் காணப்பட்டாலும் இறுதிக் காலாண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த மேலதிகத் திரவத்தன்மையுடன் மேல் நோக்கிய நகர்வொன்றினை வெளிப்படுத்தியது. மத்திய வங்கியானது வட்டி வீத ஏற்ற இறக்கத்தினை குறைப்பதற்காக திறந்த சந்தை நடவடிக்கையின் கீழான மீள்கொள்வனவு ஏலங்களை 2011 செத்தெம்பர் 19 அன்று மீள ஆரம்பித்ததுடன் நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு ஏல வீதம் 7.08 சதவீதமாகக் காணப்பட்டது. சந்தை திரவத்தன்மையானது கூட்டுமொத்த அடிப்படையில் மிகையாகக் காணப்பட்ட நிலைமையிலும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஒத்தோபரின் ஆரம்பத்தில் சில ஏற்ற இறக்கத்தினை வெளிக்காட்டியதுடன் இதனைக் குறைப்பதற்காக மத்திய வங்கியானது 2011 ஒத்தோபர் 05-14 வரையான காலப்பகுதியில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை மேற்கொண்டது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமான அண்ணளவாக 8.05 சதவீதத்தில் நிலைபெற்றிருந்த பொழுதிலும் சந்தைத் திரவத்தன்மை மேலும் வீழ்ச்சியடைந்ததுடன் சில வங்கிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு துணைநில் வசதியினை பாவித்ததனைத் தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது நவெம்பர் இறுதியிலிருந்து கொள்கை வீத வீச்சிற்கு மேலாக நகர்ந்தது. ஏற்ற இறக்கத்தினை வெளிக்காட்டியதனால் மத்திய வங்கியானது திசெம்பர் இரண்டாம் அரைக் காலப்பகுதியில் நாளாந்த நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை தொடர்ச்சியாக செயற்படுத்தியது. நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட ஏல வீதமானது 7.25 - 8.25 சதவீதத்திற்கிடையில் தளம்பலுற்றது. எனினும், வரியற்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஆண்டு முழுவதும் பெரும்பாலும் கொள்கை வீத வீச்சினுள் காணப்பட்ட அதேவேளை வீதமானது ஆண்டு காலப்பகுதியில் கொள்கை வீத வீச்சின் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்தினை நோக்கி நகர்ந்தது. அதேவேளை, வங்கிகளுக்கிடையேயான தெரிவு செய்யப்பட்ட 12 வர்த்தக வங்கிகளின் ரூபாக் கொடுக்கல்வாங்கல்களின் சராசரி வழங்கல் வீதமான இலங்கையின் வங்கிகளுக்கிடையேயான ஓரிரவு வழங்கல் வீதமானது 2011இல் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்துடன் நகர்ந்த வேளையில் ஓரிரவு மற்றும் 12 மாத இலங்கையின் வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதத்தின் பரம்பல் அண்ணளவாக 40-50 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 110 - 170 அடிப்படைப் புள்ளிகளுக்கு இடையில் இறுதி ஆறு கிழமைகளில் அதிகரித்தமையானது சந்தையின் உயர் வட்டி வீதங்களின் எதிர்பார்க்கைகளைக் குறித்துக்காட்டியது.

**அட்டவணை 7.7 தேர்ந்தெடுக்கப்பட்ட பணச் சந்தை வட்டிவீதங்கள்**

ஓராண்டுக்கு சதவீதம்

| காலம் | சராசரி நிறையேற்றப்பட்ட மீள் கொள்வனவு ஏல வீதம் | சராசரி நிறையேற்றப்பட்ட நேர்மாற்று மீள் கொள்வனவு ஏல வீதம் | நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பண வீதம் | | இ.வ.வ.வீ. ஓரிரவு | |
|---|---|---|---|---|---|---|
| | கால முடிவில் | கால முடிவில் | கால முடிவில் | மாதத்திற்கான சராசரி | கால முடிவில | மாதத்திற்கான சராசரி |
| திசெ-09 | 8.24 | - | 9.07 | 9.00 | 9.03 | 9.10 |
| திசெ-10 | - | - | 8.03 | 8.13 | 8.15 | 8.17 |
| மார்ச்-11 | - | - | 7.62 | 7.72 | 7.88 | 7.88 |
| யூன்-11 | - | - | 8.00 | 7.94 | 7.99 | 7.95 |
| செத்-11 | 7.08 | - | 8.05 | 8.02 | 8.05 | 8.03 |
| திசெ-11 | - | 8.07 | 8.97 | 8.69 | 9.01 | 8.77 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் வீதங்கள்

**வைப்பு வீதங்கள் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் ஒப்பீட்டளவில் நிலையாக இருந்தாலும் 2011இன் நான்காம் காலாண்டில் அதிகரித்தது.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வைத்திருக்கும் வட்டி உழைக்கும் அனைத்து வைப்புக்களின் இருப்புக்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமானது திசெம்பர் 2010இல் 6.23 சதவீதமாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெருமளவு நிலையாகக் காணப்பட்டது. சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமானது அதன் பின்னர் படிப்படியாக அதிகரித்து 2011 திசெம்பரில் 7.24 சதவீதமாகக் காணப்பட்டதுடன் ஆண்டு காலப்பகுதியில் 101 அடிப்படைப் புள்ளிகளினாலானதோர் அதிகரிப்பினை பதிவு செய்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வைத்திருக்கும் அனைத்துக் கால வைப்புக்களினதும் இருப்புக்களினை அடிப்படையாகக் கொண்ட சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமானது 2011 திசெம்பரில் 8.95 சதவீதமாக கணிசமாக அதிகரிப்பதற்கு முன்னதாக 2011 சனவரி - நவெம்பர் காலப்பகுதியில் 8.11 - 8.24 சதவீத வீச்சினுள் காணப்பட்டது. ஆண்டின் இறுதி மாதங்களில் வைப்பு வீதங்கள் அதிகரித்தமைக்கு குறிப்பாக உள்நாட்டுச் சந்தையில் சுருக்கமடைந்த திரவத்தன்மைக்கு முகம்

**வரைபடம் 7.6 தெரிவுசெய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**



**அட்டவணை 7.8 வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் (அ)**

ஓராண்டுக்கு சதவீதம்

| நிறுவனம் | 2010 முடிவில் | 2011 முடிவில் |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| *வைப்பு மீதான வட்டி வீதங்கள்* | | |
| ஓராண்டு நிலையான வைப்புக்கள் | 5.05-17.00 (ஆ) | 5.55-11.00 |
| சேமிப்பு வைப்புக்கள் | 1.50-9.50 | 1.00-8.50 |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 6.23 | 7.24 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 8.20 | 8.95 |
| *கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள்* | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் | 9.27 | 10.49 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் | 14.80 | 13.44 |
| ஏனைய நிதி நிறுவனங்கள் | | |
| *வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்* | | |
| தேசிய சேமிப்பு வங்கி | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 5.00 | 5.00 |
| ஓராண்டு நிலையான வைப்புக்கள் | 8.50 | 8.50 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 6.37-8.25 | 6.16-7.50 |
| ஓராண்டு நிலையான வைப்புக்கள் | 10.84-13.08 | 10.72-12.74 |
| *கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள்* | | |
| தேசிய சேமிப்பு வங்கி | | |
| வீடமைப்பு | 11.00-14.00 | 10.00-12.50 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | | |
| குத்தகை | 10.44-21.40 | 9.58-22.12 |
| வாடகைக்கு கொள்வனவு | 12.59-20.74 | 11.42-19.74 |
| உண்மைச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள் | 14.50-21.55 | 14.89-19.47 |

(அ) வர்த்தக வங்கிகளாலும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களினாலும் குறிக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டவை

(ஆ) உயர் வீதமானது சில குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட வீதமாகும்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொடுப்பதற்காக குறுங்கால வைப்புக்களைக் கவருவதற்கான அதிகரித்த போட்டியே பிரதான காரணமாயிருந்தது. அதேவேளை, தேசிய சேமிப்பு வங்கியினுடைய வைப்பு வீதங்கள் ஆண்டு காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் கால வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வைப்பு வீதங்களில் ஒரு மாத வைப்பு வீதம் 2010 இறுதியின் 8.79 - 10.50 சதவீத வீச்சிலிருந்து 2011 இறுதியில் 8.82 - 10.74 சதவீத வீச்சிற்கு அதிகரித்த போதிலும் ஓராண்டு வைப்புக்கள் 2010 இறுதியில் 10.84 - 13.08 சதவீத வீச்சிலிருந்து 2011 இறுதியில் 10.72 - 12.74 சதவீதத்திற்கு பெருமளவில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

**நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் சட்ட வீதம் மற்றும் சந்தை வீதம் என்பன 2011இன் 7.26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2012இல் 6.48 சதவீதமாக காணப்பட்டது[4].** இந்த வீதங்கள் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பரிலும் அனைத்து வர்த்தக வங்கிகளின் அண்மைய பன்னிரண்டு மாத காலப்பகுதியின் வட்டி உழைக்கும் ரூபா வைப்புக்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

4 சட்ட வீதமானது 1990ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க குடியியல் நடைமுறைச் சட்டக் கோவை (திருத்தம்) சட்டத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதுடன் இது ஒரு தொகைப் பணத்தினை மீளப் வசூலித்துக் கொள்வதற்கான எந்தவிதமான நடவடிக்கைக்கும் பொருந்தும். சந்தை வட்டி வீதமானது 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க படுகடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதுடன் இது ஏற்றுக் கொள்ளப்பட்ட வட்டி வீதத்திலல்லாது கடன் வழங்கும் நிறுவனங்களினால் ரூ.150,000 க்கு மேற்பட்ட வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் படுகடனின் மீள வசூலிப்பதற்கு பயன்படுத்தக்கூடியது.

**2011இன் இறுதிக் காலாண்டில் மேல் நோக்கி நகர்வதற்கு முன்னர் கடன் வழங்கல் வீதங்களும் ஏனைய வட்டி வீதங்களைப் போன்று ஆண்டின் முதன் மூன்று காலாண்டுகளிலும் பெருமளவு நிலையாகக் காணப்பட்டது.** ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளினால் அவர்களின் அதிகம் கொடுகடன் நம்பிக்கை வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வழங்கல் வீதங்களின் அடிப்படையிலான வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதமானது ஆண்டின் இறுதி வாரத்தில் அபரிமிதமாக அதிகரித்து 10.77 சதவீதத்தினை அடைவதற்கு முன்னர் நவெம்பர் முற்பகுதி வரை 8.92 - 9.96 சதவீத வீச்சினுள் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தின் அதிகரிப்பானது 148 அடிப்படைப் புள்ளிகளாகும். எனினும், வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்டு வெளிநின்ற கொடுகடனிற்கு உரித்தான வட்டி வீதங்களின் நகர்வினைப் பிரதிபலிக்கும் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதமானது கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களின் உயர் வட்டி வீதங்கள் வர்த்தக வங்கிகளினால் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமையினாலும் 2011இல் ஒப்பீட்டு ரீதியில் குறைவான வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட கொடுகடனின் பங்கு அதிகரித்தமையினாலும் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. இதன்படி சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதமானது 2010 இறுதியின் 14.80 சதவீதத்திலருந்து 136 அடிப்படைப் புள்ளிகளினால் 2011 திசெம்பரில் 13.44 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது[5]. வாக்குறுதிச் சான்றிதழ்கள் மற்றும் தனியார் உத்தரவாதங்களுக்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன்கள் மற்றும் இருப்புக்கள், முறிகள், தொகுதிக் கடன்கள் மற்றும் ஆயுட் காப்புறுதிக் கொள்கைகள் உள்ளடங்கலாக நானாவிதங்கள் போன்றவை நீங்கலாக அனைத்து வகையான பிணையங்களிலும் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் 2011இல் கணிசமாக வீழ்ச்சியடைந்தன.

**2011 காலப்பகுதியில் முக்கிய பொருளாதாரங்களின் வட்டி வீதங்கள் தொடர்ந்து குறைவாகவும் நிலையாகவும் காணப்பட்டமையினால் வர்த்தக வங்கிகளிடமிருந்த வெளிநாட்டு நாணயங்களினாலான உள்நாட்டு வைப்புக்களுக்கு பொருத்தமான வட்டி வீதங்களும் பெருமளவு மாற்றமின்றிக் காணப்பட்டது.** 2010இன் இறுதியின் 0.015 - 2.66 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலரினாலான சேமிப்பு வைப்புக்களின் வட்டி வீதங்கள் 2011இல் 0.015 - 2.79 சதவீத வீச்சினுள் காணப்பட்ட அதேவேளை ஐ.அ.டொலரினாலான கால வைப்புக்கள் 2011 காலப்பகுதியில் 0.10 - 5.61 சதவீத வீச்சினுள் பெருமளவில் மாற்றமின்றிக் காணப்பட்டது. ஸ்ரேலிங் பவுணினாலான சேமிப்பு வைப்புக்களிற்கான வட்டி வீதங்கள் 2011இல் 0.10 - 3.50 சதவீத வீச்சினுள் 2010 இறுதியிலிருந்து

5 2010இன் இறுதிவரை காலாண்டு அடிப்படையில் கணிப்பிடப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதத்தின் குறிப்பிட்டுச் சொல்லாக்கூடிய அபிவிருத்தி என்னவெனில் 2011 சனவரி முதல் மாதாந்த அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

**வரைபடம் 7.7** பிணையின் வகையின்படி சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் (சதவீதம்)




**வரைபடம் 7.8** அரச பிணையங்களிற்கான இரண்டாம் தரச் சந்தை விளைவு வளையி




மாற்றமின்றிக் காணப்பட்ட அதேவேளை ஸ்ரேலிங் பவுணினாலான கால வைப்புக்கள் 2010இல் பதிவுசெய்த 0.375 - 6.40 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் 0.375 - 6.24 சதவீத வீச்சினுள் காணப்பட்டது.

## அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

**திரவத்தன்மை இறுக்கமடைந்தமையினால் முதலாந்தரச் சந்தையில் அரச பிணையங்களின் விளைவுகள் ஆண்டின் இறுதிப் பகுதியில் அதிகரித்த அதேவேளை 15 ஆண்டுகள் வரையான முதிர்வுக் காலங்களையுடைய திறைசேரி முறிகள் 2011இல் வழங்கப்பட்டது.** முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களிற்கான விளைவு வீதங்கள் சனவரியில் கொள்கை வீதங்கள் குறைக்கப்பட்டது முதல் 2011இன் செத்தெம்பர் இறுதி வரையிலான ஏலங்களில் பெருமளவு மாற்றமின்றி நிலையாகக் காணப்பட்டது. எனினும், சந்தைத் திரவத்தன்மையின் வீழ்ச்சியுடன் 2011 ஒத்தோபர் முதல் அதிகரிக்க ஆரம்பித்தது. ஆண்டு காலப்பகுதியில் 91-நாள், 182-நாள் மற்றும் 364-நாள் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் முறையே 144 அடிப்படைப் புள்ளிகள், 136 அடிப்படைப் புள்ளிகள் மற்றும் 176 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்தன. முதலாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளின் விளைவு வீதங்கள் 7.77 சதவீதம் கொண்ட 2 வருட முறிகள் முதல் 9.30 சதவீதம் கொண்ட நீண்டகால முறிகள் குறிப்பாக 15 வருட முறிகள் என்ற வீச்சினுள் காணப்பட்டது.

**அரச பிணையங்களிற்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி மேல் நோக்கி நகர்ந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இன் இறுதியில் கிடையாகக் காணப்பட்டது.** ஏனைய வட்டி வீதங்களைப் போன்று திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் விளைவுகள் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பெருமளவு நிலையாக இருந்த அதேவேளை இறுதி மூன்று மாதங்களிலும் ஓர் அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. அனைத்துத் திறைசேரி முதிர்வுகளிற்கும் பொருத்தமான விளைவுகள் 2011 செத்தெம்பர் வரை 6.98 - 7.36 சதவீத வீச்சினுள் காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் முடிவில் 8.60 - 9.25 சதவீதம் என்ற வீச்சிற்கு அதிகரித்தது. அதேவேளை, இரண்டாந்தரச் சந்தையில் முதல் ஒன்பது மாத காலம் வரை 7.33 - 9.40 சதவீத வீச்சினுள் காணப்பட்ட 2 - 15 வருட முதிர்ச்சிக் காலங்களையுடைய திறைசேரி முறிகளும் 2011இன் இறுதியில் 9.45 - 9.95 சதவீத வீச்சிற்கு அதிகரித்தது.

## கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள்

**கம்பனிப் படுகடன் பிணையங்களின் வீதங்களும் 2011இல் ஏனைய சந்தை வட்டி வீதங்களுடன் நகர்ந்தது.** அதன்படி கம்பனிப் படுகடன் பிணையங்களின் விளைவுகள் நான்காம் காலாண்டில் அதிகரிப்பதற்கு முன்னர் முதல் மூன்று காலாண்டுகளிலும் பெருமளவில் நிலையாகவிருந்தது. குறுங்கால படுகடன் கருவிகளிலொன்றான வர்த்தக பத்திரத்திற்கான வட்டி

**அட்டவணை 7.9** அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள்

ஓராண்டுக்கு சதவீதம்

| கருவி | 2010 முடிவில் | 2011 முடிவில் |
|---|---|---|
| முதலாந்தரச் சந்தை | | |
| திறைசேரி உண்டியல்கள் | | |
| 91 நாள் | 7.24 | 8.68 |
| 182 நாள் | 7.35 | 8.71 |
| 364 நாள் | 7.55 | 9.31 |
| திறைசேரி முறிகள் (அ) | | |
| 2 ஆண்டு | 8.27 (ஆ) | 7.77 (இ) |
| 3 ஆண்டு | 8.15 | 7.99 (ஈ) |
| 4 ஆண்டு | 8.60 | 8.30 (உ) |
| இரண்டாந்தரச் சந்தை | | |
| திறைசேரி உண்டியல்கள் | | |
| 91 நாள் | 7.26 | 8.60 |
| 182 நாள் | 7.36 | 8.78 |
| 364 நாள் | 7.55 | 9.25 |
| திறைசேரி முறிகள் | | |
| 2 ஆண்டு | 7.65 | 9.45 |
| 3 ஆண்டு | 8.03 | 9.85 |
| 4 ஆண்டு | 8.78 | 9.92 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) கருவியின் முதிர்வுக் காலத்திற்கு நெருக்கமாகவுள்ள முதிர்வுக் காலத்தின் அடிப்படையில்.
(ஆ) 2 ஆண்டு திறைசேரி முறிகளின் இறுதி ஏலம் 2010 ஒகத்தில் இடம் பெற்றது.
(இ) 2 ஆண்டு திறைசேரி முறிகளின் இறுதி ஏலம் 2011 பெப்புருவரியில் இடம் பெற்றது.
(ஈ) 3 ஆண்டு திறைசேரி முறிகளின் இறுதி ஏலம் 2011 சனவரியில் இடம் பெற்றது.
(உ) 4 ஆண்டு திறைசேரி முறிகளின் இறுதி ஏலம் 2011 யூனில் இடம் பெற்றது.

## சிறப்புக்குறிப்பு 13 சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்பு மற்றும் நாணயக் கொள்கை

இன்றைய மத்திய வங்கித்தொழிலின் சச்சரவுக்குரிய பிரச்சனைகளில் ஒன்றாக நாணயக் கொள்கை சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்புக்கு பதிலிறுக்க வேண்டுமா என்பதாகும். சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்பு தொடர்பான நாணயக் கொள்கை நடவடிக்கைகளால் நிர்ப்பந்திக்கப்படும் இன்னுமொரு கரிசனையாக பணவீக்கம் மற்றும் உண்மை பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கிகளின் கட்டளைகளுக்கு பதிலிறுக்க வேண்டுமா என்பதாகும். இவ்விரு கேள்விகளைக் கொண்டு சொத்துக்களின் திடீர் அதிகரிப்பு தொடர்பான இரண்டு நிலைகள் இன்றைய மத்திய வங்கித்தொழிலின் விவாதங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்விரு நிலைகள் சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்புக்கெதிரான 'முட்டுக்கொடுத்தல்' எதிர் விலைகளின் திடீர் விலை அதிகரிப்பு சடுதியாகக் குறைவதற்குப் பின்னரான 'தூய்மையாக்கல்' என கருத்தில்கொள்ளப்படுகின்றது.

சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்பு தொடர்பான விவாதத்தை பெரிதுபடுத்திய மிக அண்மைய நிகழ்வு 2008 - 2009இன் உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளாகும். உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு முன்பான காலத்தில், சொத்துக்களின் அடிப்படை மட்டங்களிலிருந்து சொத்து விலைகளில் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பு ஐக்கிய அமெரிக்க வீடமைப்புச் சந்தையில் அவதானிக்கப்பட்டது. நீண்ட காலம் தக்க வைத்திருந்த ஐக்கிய அமெரிக்க வீட்டின் விலை எழுச்சி தேய்வடைந்தமை அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் குறிப்பிடத்தக்க தூண்டல்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. ஐக்கிய நாட்டு வீட்டு விலைகளிலான எழுச்சி மற்றும் இதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதாரத் தேய்வடைவு 1985 - 1992 காலப்பகுதியில் யப்பானில் ஏற்பட்ட சொத்து விலைகளின் எழுச்சி மற்றும் குறைவடைவுச் சுழற்சியுடன் ஒப்பிடத்தக்கது. 1960 இலிருந்து ஆரம்பிக்கும் 30 ஆண்டுக் காலத்தில் யப்பானின் உண்மையான மொ.உ.உற்பத்தி 6 சதவீதத்திற்கும் கூடுதலான ஆண்டுச் சராசரி வீதத்தில் வளர்ச்சிடைந்தது. இது யப்பானில் வியாபார நிறுவனங்களின் வர்த்தக உண்மைச் சொத்து மற்றும் பங்குகள் ஆகிய இரண்டிற்குமான பலமான கேள்வியை உருவாக்கியது. பங்குச் சந்தை உச்சநிலைக்குச் சென்றது. நாணயக் கொள்கை தூண்டுதலாக இருந்ததுடன் இங்கு பணநிரம்பலின் விரிந்த $M_2$ அளவீடு இரட்டை இலக்க வீதங்களுக்கு அதிகரித்தது. இந்நாணய விரிவாக்கம் வட்டி வீதங்களை தாழ்ந்த மட்டங்களுக்குள் தள்ளியதுடன் அதிகரித்துச் செல்லும் சொத்து விலைகளுக்கு பங்களிப்புச் செய்தது. எனினும், 1990இல் சொத்து விலைகள் எதிர் மாறாக மாற்றமடையத் தொடங்கின. பங்குச் சந்தை ஆண்டின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து 1990இல் இம்மட்டத்தின் அரைவாசிக்கு வீழ்ச்சியடைந்தது. சொத்து விலையில் ஏற்பட்ட சடுதியான விலைக் குறைவு பொருளாதாரத்தின் எஞ்சிய துறைக்கும் பரவி 1992 - 1993இல் 1 சதவீதத்திற்கும் குறைவான பொருளாதார வளர்ச்சியில் கூர்மையான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதே மாதிரியான நிலைமை 2007 - 09 இல் ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்டது. யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிலும் சொத்து விலை எழுச்சியைத் தொடர்ந்து சொத்துக்களின் விலை சடுதியாகக் குறைவடைந்தமை, செல்வத்தில் ஏற்பட்ட எதிர்பாராத குறைப்பு, செயற்படாக் கடன்களிலான பாரிய அதிகரிப்பு, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் பிரச்சனைகள் மற்றும் பொதுவான பொருளாதார மீட்சி பற்றிய பரவலான நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியது. யப்பான் மற்றும் ஐ.அமெரிக்காவின் இறைக் கொள்கைப் பதிலிறுத்தல் ஒரே மாதிரியாக விளங்கியது; அதிகரித்த அரசாங்கச் செலவிடல், பாரிய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் மற்றும் மொ.உ.உற்பத்தியின் பங்காக அரச படுகடனில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பு எனக் காணப்பட்டது. எனினும், ஐ.அமெரிக்காவில் பெடறல் றிசேவ் அடித்தள அளவீட்டு வட்டி வீதங்களை தொடர்ந்து குறைத்த அதேவேளை வங்கித்தொழில் முறையினுள் ஒதுக்குகளின் பாரிய அளவை உட்செலுத்தியது. இங்கு முக்கியமானதாக இருக்கக்கூடிய ஏனைய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. பொருளாதாரம் மற்றும் தொழில் சந்தைகள் யப்பானைவிட ஐ.அமெரிக்காவில் கூடிய ஆற்றலுடையதாக விளங்கின. உதாரணமாக, தொழிலின்மை வீதம் 2007 - 09 காலப்பகுதியில் ஐ.அமெரிக்காவில் அதிகரித்திருக்கையில் யப்பானில் அதன் தொழிற்சந்தையின் தன்மை காரணமாக சடுதியான விலைக்குறைவுக்குப் பின்பு தொழிலின்மையில் பெருமளவு மாற்றம் அவதானிக்கப்படவில்லை. இரு சந்தர்ப்பங்களிலும் பொருளாதாரத்தை எழுச்சி பெறச் செய்வதற்கு பாரிய நாணய மற்றும் இறைத் தூண்டல் வழங்கப்பட்டது.

மேலே விவாதிக்கப்பட்ட இரு நிகழ்ச்சிகள் முக்கியமாக சொத்துக்களின் விலைகள் சடுதியாகக் குறைவடைவதன் தூய்மையாக்கல் தொழிற்பாடுகள் மற்றும் சொத்துக்களின் திடீர் விலையதிகரிப்பு சடுதியாகக் குறைவடைந்த பின்னரான தூய்மையாக்கல் செலவு குறைவாக இருக்கும் என்ற அனுமானத்தில் பொருளாதாரத்திலான எதிர்க்கணிய விளைவைக் குறைக்க முயற்சித்தல் என்பனவற்றில் கவனம் செலுத்தியது. இதற்கு முரணாக, சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்பு சடுதியாகக் குறைவடைந்த பின்னரான தூய்மையாக்கல் செலவு 2008-09இல் ஏற்பட்டது போன்ற நிதியியல் நெருக்கடியைப் பின் தொடர்ந்ததாக இருப்பின் இது மிகவும் உயர்வாக இருக்குமென தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. அண்மைய திடீர் விலையதிகரிப்பின் இன்னுமொரு சுவாரசியமான பண்பு யாதெனில் திடீர் விலையதிகரிப்பு வீழ்ச்சியடைய முன்னரான காலப்பகுதிகளில் விலை மற்றும் வெளியீட்டு உறுதிப்பாடு இருப்பினும் கூட திடீர் விலையதிகரிப்பு ஏற்படலாம் என்பதுடன் பின்னர் தூய்மையாக்கலை விட உள்ளார்ந்த வளமுள்ள திடீர் விலை அதிகரிப்புக்கு எதிரான 'முட்டுக்கொடுத்தல்' இற்கான மிகவும் பலமான காரணத்தை எடுத்துக்காட்டுகிறது.

இவ்விவாதத்தில், இரு வகையான சொத்துக்களின் திடீர் விலையதிகரிப்புகள் காணப்படுகின்றன. 2008 - 09 இன் நெருக்கடியானது ஒரு வகையான திடீர் விலை அதிகரிப்பாக இருந்ததுடன் இது கொடுகடனால் ஏற்பட்ட திடீர் விலை அதிகரிப்பாகவிருந்து முறைமை ரீதியான முக்கியமான நிதியியல் துறைக்கு அதன் அண்மியத்தன்மை காரணமாக மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இரண்டாவது வகை திடீர் விலையதிகரிப்பு குறைந்தளவு ஆபத்துள்ளதாகவிருந்து பகுத்தறிவுக்கு மாறான எழுச்சியாகக் கருதப்படலாம். பகுத்தறிவுக்கு மாறான எழுச்சியுள்ள திடீர் விலை அதிகரிப்பு அளவுக்கதிகமான நம்பிக்கையுடைய எதிர்பார்ப்புக்களால் மட்டும் ஏற்படுவதுடன் நிதியியல் முறைமைக்கு மிகக் குறைவான இடர்நேர்வை ஏற்படுத்துகிறது. எனவே, உள்ளார்ந்த வளம்மிக்க இரு வகை விலை அதிகரிப்புக்கள் உள்ளிட்ட சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்புக்களுக்கு எதிராக 'முட்டுக்கொடுத்தல்' இற்குப் பதிலாக கொடுகடனால் ஏற்படுத்தப்படும் திடீர் விலை அதிகரிப்புக்களுக்கு எதிராக 'முட்டுக்கொடுத்தல்' பலமானதாக விளங்குகின்றது.

சொத்து விலை செழிப்படைவதில் நாணயக் கொள்கை என்ன பங்கை வகிக்க வேண்டுமென்பது தெளிவற்றதாகக் காணப்படுகிறது. இலகுவான நாணயக் கொள்கை இடர்நேர்வுச் சக்திகளைப் புறக்கணிப்பதன் மூலம் விளைவுகளைத் தேடுவதில் இடர்நேர்வை

ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கலாம். நிதியியல் சந்தைகளின் ஊக்குவிப்புத் திட்டங்களும் அளவுக்கதிகமான இடர்நேர்வை உள்ளெடுப்பதாக குற்றஞ்சாட்டப்படலாம். இடர்நேர்வை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் இன்னுமொரு நாணயக் கொள்கை வருமானம் மற்றும் மதிப்பீட்டுத் தாக்கங்களினூடாக தொழிற்படுகிறது. இது எப்போதும் நடைபெறுவதால், நிதியியல் நிறுவனங்கள் குறுகிய காலத்துக்குக் கடன் வாங்கி நீண்ட காலத்திற்கு கடன் வழங்கினால் அளவுக்கதிகமான இலகுவான நாணயக் கொள்கை தேறிய வட்டி இலாபங்களை அதிகரிக்கிறது மற்றும் நிறுவனங்களின் பெறுமதியை அதிகரிக்கிறது, முடுக்கி விடுவதற்கான அவற்றின் இயலளவை அதிகரிக்கிறது. இத்துடன், ஐந்தொகையின் சொத்துப் பக்கத்தினூடாக குறைந்த வட்டி வீதங்கள் பிணையமாக்கப்பட்ட பெறுமதிகளை அதிகரிக்கச் செய்யலாம், மீண்டும் அதிகரித்த கடன் வழங்கலை இயலச் செய்யலாம். அநேகமாக அனைத்து நாடுகளிலும் நாணயக் கொள்கையின் அண்மைய கூடியளவில் எதிர்வுகூறக் கூடிய போக்கு இரு வேறு வழிகளில் இடர்நேர்வு ஏற்பதை ஊக்கப்படுத்துகிறது. முதலாவதாக, கூடியளவில் எதிர்வுகூறக் கூடிய நாணயக் கொள்கை நிச்சயமற்ற தன்மையைக் குறைக்கலாம் மற்றும் இடர்நேர்வைக் குறைத்து மதிப்பிடுவதில் நிதியியல் சந்தைக்குப் பங்களிக்கலாம். இரண்டாவதாக, நிதியியல் குறுக்கீடுகளின் பின்னரான தூய்மையாக்கல் தார்மீக ரீதியான தீங்குவிளைவித்தலுக்கு இட்டுச் செல்லும். இங்கு, நிதியியல் நிறுவனங்கள் அறிவிடமுடியாத முதலீடுகளிலிருந்து மீட்சியடைவதற்கு கொள்கை வகுப்பாளர்களின் உதவியை நாடுவதால் நிதியியல் நிறுவனங்களின் சந்தை ஏற்படுத்தும் பங்கினைக் குறைக்கிறது.

நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் மத்திய வங்கிகள் எப்போதும் கடன் வழங்குவோரின் கொடுகடன் நிபந்தனைகள் பற்றிய தகவலை எப்போதும் வைத்திருக்கின்றன. எனவே, கொடுகடன் விலையதிகரிப்பு கண்டுபிடிக்கப்பட்டு சரி செய்யப்படலாம் என்று வாதிடுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது. வீடமைப்புச் சந்தையிலான உள்ளார்ந்த வளம் மிக்க சமநிலையற்ற தன்மையை ஒழுங்குபடுத்துவதற்கு ஊக வழிமுறைகள் என அழைக்கப்பட்ட அவுத்திரேலியாவின் 2002 - 04 காலப்பகுதி அனுபவம் சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்புக்கு எதிராக முட்டுக் கொடுத்தல் பற்றிய சாத்தியங்களை ஆராய்வதில் புதிப்பிக்கப்பட்ட ஆர்வத்தை வசதிப்படுத்தும். முன்மதியுடைய பேரண்ட தோற்றப்பாடு மூலம் கொடுகடன் விலையிலான திடீர் விலையதிகரிப்பு எதிராக 'முட்டுக்கொடுத்தலுக்கான' பலமான காரணம் காணப்படுகிறது. முதலாவதாக, கொடுகடன் விலையிலான திடீர் விலையதிகரிப்பை முகாமை செய்வதில் ஈடுபடும் எந்தவொரு உபாயமும் முறைமையிலான செயலிழப்புக்குத் தீர்வு காணவேண்டும் (நிலையான சந்தைச் செயலிழப்புக்கள்). சந்தைச் செயலிழப்புக்களை பிரச்சனையாக அடையாளம் கண்டு ஏற்றுக்கொண்டு கொடுகடன் விலையிலான திடீர் விலையதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளைத் தேடுவது இயற்கையானதாகும். இவ்வழிமுறைகள், போதுமான வெளிப்படுத்துகை மற்றும் மூலதனத் தேவைப்பாடுகள், திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் உரிய நேரத்திலான சீர்செய்யும் நடவடிக்கை, நிறுவனமொன்றின் இடர்முகாமைத்துவ நடைமுறைகளை கவனமாகக் கண்காணித்தல், ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் நிதியியல் நிறுவனங்களின் நெருக்கமான மேற்பார்வையை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான போதியளவு மூலவளங்கள் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பவற்றை உள்ளடக்குகின்றன. சந்தைச் செயலிழப்புகளை மதிப்பிடும் இன்னுமொரு அணுகுமுறை கொடுகடன் சந்தைக் கூட்டுகளை கண்காணிப்பதாகும். கொடுகடன் விலையிலான திடீர் விலையதிகரிப்பை கட்டுப்படுத்தும் முன்மதியுடைய பேரண்டக் கொள்கைகள் வங்கிகளால் மேற்கொள்ளப்படும் ஆற்றல் மிக்க ஏற்பாடுகள், கொடுகடன் விரிவாக்கங்களின் போது மீள்கொள்வனவு கடன் வழங்கலுக்கான இலாபத் தேவைப்பாடுகள், நிதியியல் நிறுவனங்களின் குறிப்பிட்ட பொறுப்புக்கள் மீதான சூழலை மாசுபடுத்தும் கம்பனிகள் மீது அநேகமாக விதிக்கப்படும் சிறப்பு வரி வகை வரிகள் (Pigouvian type tax) என்பவற்றை உள்ளடக்குகின்றன. நாணயக் கொள்கை தோற்றப்பாட்டில், கொடுகடன் சந்தைக் கூட்டுக்களை கண்காணிப்பதற்கு தார்மீகமாக இணங்கிச் செல்லும் அல்லது ஊக வழிமுறைத் தொழிற்பாடுகள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டன. மிக அண்மிய காலத்தில், பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறையில் அளவுக்கதிகமானவற்றைத் தவிர்ப்பதற்கு மத்திய வங்கிகள் துணைநில் வசதிகளுக்கான நுழைவை முகாமைசெய்தல், பல்புடை வட்டி வீத பொறிமுறை, சந்தை ஒதுக்கு நடுநிலைமை மற்றும் கொடுகடன் இலக்குகள் என்பவற்றை கருத்தில்கொண்டன.

முடிவாக, உள்ளார்ந்த வளம் மிக்க கொடுகடன் விலையிலான திடீர் அதிகரிப்புக்கெதிராக முட்டுக்கொடுத்தலுக்கான காரணம் - நிதியியல் சந்தை சமநிலையற்ற தன்மைகளின் வெளிப்படுத்துதல் - இது நாணயக் கொள்கையின் பொதுவான கட்டளையை நிறைவேற்றுவதில் சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்புக்கெதிராக முட்டுக்கொடுத்தலை விட மிகவும் பலமானதாகும். கொடுகடன் சந்தைகளிலான அளவுக்கதிகமான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கை மற்றும் முன்மதியுடைய பேரண்ட வழிமுறைகள் பலப்படுத்த வேண்டுமென்பதுடன் இந்நேரங்களில் நிதியியல் சமநிலையற்ற தன்மைகளுக்கு எதிராக முட்டுக் கொடுப்பதற்கு நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்ட வேண்டுமென்பதை தொடர்ச்சியான சிந்தனையாக விதந்துரைக்கிறது.

உசாத்துணை


1. Kohn, D.L. (2006). Monetary Policy and Asset Prices. At "Monetary Policy: A Journey from Theory to Practice," a European Central Bank Colloqium held in honor of Otmar Issing, Frankfurt.
2. Minford, P. (2007). Should Central Banks Target anything other than inflation (such as Moeny Supply)? Cardiff Business School.
3. Mishkin, F.S. (2008). How Should We Respond to Asset Price Bubbles? At the Wharton Financial Institutions Center and Oliver Wyman Institute's Annual Financial Risk Round Table, Philadelphia.
4. Rajan, R. (2010). Fault Lines: How Hidden Fractures Still Threaten the World Economy. Princeton University Press.
5. Randazzo, A., Flynn, M. and Summers, A.N. (2009). Avoiding an American 'Lost Decade': Lessons from Japan's Bubble and Recession. Reason Fundation Policy Study. No. 373.
6. Shirakawa, M. (2010). Revisiting Monetary Policy. Comments at the IMF/ECB/FRB High Level Conference, Washington DC.
7. White, W.R. (2009). Should Monetary Policy 'Lean or Clean"? Federal Reserve Bank of Dallas, Working Peper No. 34

வீதங்கள் 2011 காலப்பகுதியில் 8.26 - 14.00 சதவீத வீச்சினுள் காணப்பட்டது. 2011இல் 3 - 10 முதிர்வுக் காலங்களைக் கொண்ட ஐந்து புதிய கம்பனித் தொகுதிக் கடன் பத்திரங்கள் பட்டியலிடப்பட்டதுடன் அவற்றின் வட்டி வீதங்கள் 11.50 - 13.00 சதவீத வீச்சினுள் காணப்பட்டது.

## 7.5 எதிர்கால அபிவிருத்திகள், சவால்கள் மற்றும் தோற்றப்பாடு

**பன்னாட்டு வழங்கல் நிலைமைகளில் நிச்சயமற்ற நிலைமை காணப்பட்ட போதிலும் கேள்விப்பக்கக் காரணிகளை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட பொருத்தமான நாணயக் கொள்கை வழிமுறைகளுடன் மேலும் முன்னேற்றம் கண்ட உள்நாட்டு வழங்கல்பக்க நிலைமைகளினால் முதன்மைப் பணவீக்கமானது ஓரிலக்க மட்டத்தில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** 2011இன் இறுதியுடன் ஆண்டுக்காண்டு பணவீக்கமானது அநேகமாக 3 ஆண்டுகள் ஓரிலக்க மட்டங்களுள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனினும், பன்னாட்டு பண்டங்களின் விலைகள் குறிப்பாக உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகள் உயர்வாகவும் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றமையானது உள்நாட்டு விலை அசைவுகளில் நிச்சயமற்ற தன்மைகளை ஏற்படுத்தும். உள்நாட்டில் முன்னேற்றம் கண்ட போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் முறைமைகள், முன்னேற்றம் கண்ட உற்பத்தித்திறன் மற்றும் அதிகரித்த உற்பத்தி என்பன நுகர்வோர் விலைகளினாலான அழுத்தங்களை குறைவடையச் செய்யும் அதேவேளை எதிர்காலத்தினை கருத்தில் கொண்டதான கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை நடவடிக்கைகள் என்பன நுகர்வோர் விலைப் பணவீக்கமானது 2012இல் ஓரிலக்க மட்டங்களில் இருப்பதனை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஆண்டில் ஏற்படக்கூடிய எந்த வகையான பாதகமான அபிவிருத்திகளும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இறை, நாணய மற்றும் வெளிநாட்டுத்துறை கொள்கைகளை உள்ளடக்கியதோர் கொள்கைக் கலவையின் மூலம் தொடர்ந்து எதிர்கொள்வது, பொருளாதாரத்தினுள் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கு இன்றியமையாததாகும்.

**விரைவாக மாற்றமடையும் பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகளில் குறுங்கால வட்டி வீதங்களின் ஏற்ற இறக்கத்தினை குறைப்பதற்கு மத்திய வங்கியானது குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டது.** கடந்த இரண்டு ஆண்டுகளாக சந்தை பங்குபற்றுநர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த மிகுதியான மேலதிக திரவத்தன்மையானது 2011 காலப்பகுதியில் படிப்படியாக குறைவடைந்ததுடன் அதன் பின்னர் சந்தைத் திரவத்தன்மையானது மிகைக்கும் பற்றாக்குறைக்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. வங்கிகளுக்கிடையில் திரவத்தன்மை வழங்கலில் ஏற்பட்ட சரிவு மற்றும் அந்த நேரங்களில் வங்கிகளுக்கிடையிலான சந்தையில் திரவத்தன்மை தேவைப்பாடுகளை சிறப்பாக பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமையானது சந்தை வட்டி வீதங்களில் அதிகம் ஏற்ற இறக்கம் ஏற்படுவதற்கு காரணமாயிருந்ததோடு இது ஒட்டுமொத்த சந்தைத் திரவத்தன்மையானது மிகையினை பதிவு செய்த காலங்களிலும் மத்திய வங்கியின் தலையீட்டினை தேவைப்படுத்தியது. திரவத்தன்மை தொடர்பான எதிர்வுகூறலினை மேம்படுத்துதல், அனைத்துச் சந்தை பங்குபற்றுநர்களையும் குறுங்கால சந்தை செயற்பாடுகளில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மற்றும் இறை அதிகாரசபைகளுடன் அவர்களின் நிதித் தேவைப்பாடு தொடர்பாக பெருமளவில் ஒருங்கிணைந்து செயற்படுதல் போன்ற வழிமுறைகள் சந்தைத் திரவத்தன்மையினை சிறப்பாக முகாமை செய்வதற்கும் வட்டி வீதங்களை விருப்பு மட்டங்களில் பேணுவதற்கும் இன்றியமையாததாகும்.

**தற்போதைய நாணய இலக்கிடல் வரைபின் வெற்றி என்பது பணவழங்கலின் வளர்ச்சிக்கான விருப்பு மட்டத்தினை எறிவு செய்வதிலும் நாணயக் கொள்கை கருவிகளைப் பயன்படுத்தி பண வளர்ச்சியினை நிர்ணயிக்கப்பட்ட மட்டத்தில் பராமரிப்பதிலுமே தங்கியுள்ளது.** 2011இல் அவதானிக்கப்பட்டது போன்று தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் உயர் வளர்ச்சி மற்றும் அரச துறைகளின் உயர் கடன்பாடுகள், நாணயக் கூட்டுக்கள் இலக்கிற்கப்பால் செல்வதற்கு வழிசமைக்கும். வட்டிக்கு அதிகம் மாற்றமடையக் கூடிய தனியார் துறைக் கொடுகடனானது நாணயக் கொள்கை வழிமுறைகளினூடாக எதிர்கொள்ளப்பட வேண்டிய அதேவேளை அரச துறையினால் வங்கி மூலங்களிலிருந்து பெறப்படும் கொடுகடன்கள் குறைக்கப்படுவது அவசியமாகவுள்ளதுடன் இது ஆண்டின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட மட்டங்களினுள் வைத்திருக்கப்படுவதுடன் இது நாணயக் கூட்டுக்களை விருப்பு மட்டங்களில் பராமரிப்பதிலுள்ள இடர்நேர்வினையும் நாட்டின் தனியார் துறை முதலீட்டின் குறைவிற்கான சாத்தியப்பாட்டினையும் குறைக்கும்.

**மத்திய வங்கியானது தனது நாணயக் கொள்கை தீர்மானமெடுக்கும் செயன்முறையை 2012இலும் தொடரும்.** கடந்த சில ஆண்டுகளாக வளர்ச்சியடைந்த முக்கிய பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு பணத்தின் அளவு மற்றும் கொடுகடனில் அதிகம் கவனம் செலுத்தியதுடன் இது, நாணய இலக்கிடலானது நம்பிக்கைக்குரிய நாணயக் கொள்கை கட்டமைப்பு என்ற நிலையினை இன்னும் இழக்கவில்லை என்பதற்கு உறுதியான எடுத்துக்காட்டாகவிருந்தது. முன்னோக்கிச் செல்வதற்கு பரந்தளவிலான குறிகாட்டிகள் மற்றும் நாணயக் கொள்கைக் கருவிகளுடன் இசைவான கட்டமைப்பில் தெளிவான பணவீக்க இலக்கிடலை பின்பற்றுவது பணவீக்க எதிர்பார்க்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணும் குறிக்கோளினை அதிக வினைத்திறனுடன் வழங்குவதற்கும் பயனுள்ளதாயிருக்கும்.